ஆண்டு சந்தா ரூ. 7. தனிப் பிரதி அணா 2. சிலோன் 15 சதம் REGD. NO 4642

# திராவிடநாடு

மலர் 11. | 30—11—52 | இதழ் 22

## ★ வாழ்த்துகிறோம்— வரவேற்கிறோம்! ★

உத்வேகத்தால் உந்திக் கிளம்புவதும், உணர்ச்சி குறைந்ததும் வடிந்துவிடுவதும், நல்ல கொள்கைகளைத் தாங்கிச் செல்லும் அரசியல் இயக்கங்களை வளரச் செய்யாது. காட்டாறுபோலக் கிளம்பி அணையை இடிப்பதும், பிறகு அடங்கிப்போய் மணல்வெளிதென்படுவதும், விடுதலை இயக்கங்களுக்குக் கூடாது. உள்ளத்துக் குமுறல் சந்தர்ப்பம் காரணமாக, 'திடீரென' வெடிக்கும்போது, கொடிகளைத் தாங்கிப் புறப்படுவதும், ஓடியாடி அலைவதும், பிறகு ஓய்ந்து கிடப்பதும், காட்டாறு பாய்ந்தபின் காணப்படும் சமவெளியாகவே ஆக்கும்.

இந்த நிலை, புதிய தாயகத்தைச் சிருஷ்டிக்கும் பெரும்பணியேற்ற, அரசியல் இயக்கங்களிடம் வளர்வதால், நிலையான நன்மைகளை, மக்களுக்குச் சம்பாதித்துத் தரமுடியாது. வாழ்க்கைப் பிரச்னைகளுக்கு ஆளாகி, சிந்திக்கும் திறனிழந்து கிடக்கும் மக்களைத் தட்டி எழுப்பி, அவர்களையும் உலகத்தோடு இழுத்துச் சென்று, உலகம் உய்க்கும் இன்பங்களை எல்லோருக்கும் உண்டாக்கித் தரத்தான், அரசியல் இயக்கங்கள் உண்டாகின்றன.

பிறரின் காரணமாக அடிமைப்பட்டுக் கிடக்கும் சமுதாயத்தில், அவர்கள் இதயங்களில் சுதந்திரக் கனலை, வீரமிக்கப் பேச்சாலும் ஆர்வமிக்க எழுத்தாலும் உண்டாக்கிவிடலாம். ஆனால், அவ்விதம் உண்டாக்கிவிடும் ஆர்வத்தையும் எழுச்சியையும், பாதை காட்டி—பலனுள்ள வழிகளில் பாயும்படிச் செய்யவேண்டும். அப்போதுதான் ஒரு அரசியல் கட்சியின் நோக்கமும் ஆசையும், மக்களின் தொடர்போடு வளரும். அணைக்கட்டிலிருந்து வழிந்தோடும் ஆற்றோட்டத்தைத் தடுத்து சிற்றாறுகளாக்கி, வாய்க்கால்களாக்கி, கழனிகளைப் பதப்படுத்துவதுபோல், விடுதலை இயக்கத்தை நடத்திச் செல்லும் அரசியல் இயக்கம், மக்கள் உள்ளத்தைப் பதப்படுத்தும் பணியைச் செவ்வனே செய்யவேண்டும்.

இந்த முக்கியத்தை, நாம் நன்றாக உணர்ந்த காரணத்தாலேயே, அடிக்கடி வலியுறுத்தி வந்தோம் — கழகத்துக்குச் சட்ட திட்டம் வேண்டும், அவைகளின் அடிப்படையில் கழகங்கள் அமைத்தாகவேண்டும், என்பதாக.

இந்த அமைப்பு முறையில்; நாம் அவ்வளவு கவனம் செலுத்தியதன் காரணம், 'காட்டாறு' உணர்ச்சி பலன் தராது என்ற எண்ணம் ஒருபுறமிருக்க, உலகில் பரவிவரும் ஜனநாயக மனோபாவம், நமது மக்களிடையில் வளர்க்கப்பட வேண்டும்—அதன் அருமைகளை உணர்த்த வேண்டும் என்கிற பேரார்வமுமாகும்.

"ஏனிந்தப் பேரார்வம்? கூட்டம் போட்டால் கூடுகிறார்கள், மக்கள். நாம் நினைப்பதைச் சொல்லுவோம். அந்தப் போராட்டத்தில் பங்கு கொண்டால் கொள்ளட்டும்—இல்லாவிட்டால் போகட்டும். நமக்கென்ன நஷ்டமாம்!" என்று, தன்னையும் தன்னைச்சார்ந்த சிலரையும் வைத்து அரசியல் இயக்கத்தை நடத்திச் செல்வதென்பது வளர்வது, ஆபத்து என்பது நமது கருத்தாகும்.

இந்த ஆபத்தின் அளவை, நாம் நன்கறியும் காரணத்தால்தான், 'ஜனநாயகம்! ஜனநாயகம்!!' என்று, அடிக்கடி வலியுறுத்தி வந்ததும்—வலியுறுத்தி வருவதும்.

ஜனநாயகத்துக்கு நாம், அவ்வளவு மதிப்புக் கொடுக்கும் காரணம், நாம் அமைக்க விரும்புகிற திராவிடக்கூட்டாட்சிமுறை, ஜனநாயக மேடையில் சிறப்புறவேண்டும் என்பதுதான்.

இந்த 'ஜனநாயகமுறை' களைப் பற்றி முழக்கமிட்ட, காங்கிரஸ் இயக்கம், சுயராஜ்யம் கிடைத்தபின், சுக்கு நூறாக்கிச் சிதறிக்கொண்டிருப்பதையும், தண்டு தூக்கியவன் தலைவனாக உலவுவதையும், காண்கிறோம். இந்தக்கேடு, அங்கு உருவானதற்குக் காரணம், அவர்களுக்கென ஓர் அடிப்படை இல்லாமலே, தேசியப் போராட்டங்களில் ஈடுபட்டதே ஆகும். மக்கள் மன்றத்திலிருந்த வெள்ளை ஆதிக்க உணர்ச்சியைத்தூண்டி, 'சுயராஜ்யம்! சுயராஜ்யம்!!' என்று எங்கும்முரசொலித்து முழக்கமிட்டபோது, அவர்கள் 'அந்த சுயராஜ்யம் எப்படியிருக்கும்?' என்பதை மக்களிடம் எடுத்துக்கூறத் தவறிவிட்டார்கள். அவர்கள் இதயத்தில், 'வெள்ளையனை ஒழிக்கவேண்டும்' என்கிற ஆர்வம் இருந்தளவுக்கு, 'சுயராஜ்யம்எப்படி அமையவேண்டும்' என்பதைக் குறித்து சிந்திக்கவில்லை! தேசியக் கனவில், எதிர்காலம், மறக்கடிக்கப்பட்டது.

இந்த முக்கிய தவறை, 1934-ல் பண்டிதநேரு தாம் எழுதிய நூல் ஒன்றில், கண்டித்தார் — 'நம்மிடம் எதிர்காலம் குறித்த ஒழுங்கான திட்டம் இல்லை. சுயராஜ்யம் பெற்றபின் மக்களை எங்கே நிறுத்துவோம் என்ற உறுதியில்லை. வெள்ளையனை ஒழிப்போம் என்றுமட்டும் பேசுகிறோம்!' என்பதாக.

ஆனால், அவரே இன்று அரசாங்கத்தைத் தலைமைதாங்கி நடத்துகிறார்—அவர், அன்று எதற்காகப் பயந்தாரோ, அவைகளே அவரைச் சுற்றிவளைத்து வீழ்த்திவிட்டன. காங்கிரஸ்காரர்கள் தடியடியும், குண்டும் தாங்கிப்போராடிய, விடுதலை இயக்கம், கொட்டமடிப்போரின் கூடாரமாகி, ஜனநாயகத் தத்துவமும் தரைமட்டமாக்கப்பட்டு, சீரழிந்து வருகிறது.

இந்தச் சீரழிவுக்குக் காரணம் '1934 பண்டிதர்' குறிப்பிட்டதுபோல, அடிப்படையை மறந்து, வெளியாதிக்கத்தை விரட்டும் ஆவேசத்தை மட்டும் மக்கள் மன்றத்தில் பரப்பியதுதான். ஆவேசம் பலன் தந்தது—ஆனால், அடிப்படையில்லாததால் காட்டாறுவடிந்து, மணல்வெளியும் அங்கே கள்ளியும் முள்ளியும் படர்ந்து கிடக்கின்றன.

நாம் காணவிரும்பும் தாயகம் பூஞ்சோலையாகயிருக்க வேண்டும் என்கிற ஆவலை வெளியிடும்போது, அதற்கான அடிப்படையையும் விளக்கி வருகிறோம்—'மனிதர்களின் அரசாக' விளங்கும் என்பதாக. பேதாபேதமும், பிளவும் அற்ற சமதர்மக் குடியாட்சிக் கேற்றவகையில், நமதுபணி பெருக்கெடுத்து ஓடவேண்டும்.

இன்று, தென்னாட்டில், நமது குரல் எங்கும் ஒலிக்கிறது. மாற்றார் கேலிசெய்தாலும், சிலர் எரிச்சலைக் கொட்டினாலும், 'இவர்கள் கூறுவதா! நாம் ஏற்பதா?' என்று வீறுப்பு பேசினாலும், நம்முடைய முழக்கத்தின் உட்பொருளை உணரத் துவங்கிவிட்டார்கள். மற்றோர் ஆதிக்கத்துக்குத் தென்னாடு ஆட்பட்டுக்கிடக்கிறது என்பதை அன்பர் ஆச்சாரியார் போன்றோர் 'சூசகமாகத் தெரிவிப்பது, மதகுரலின்

(அடுத்த பக்கம் பார்க்க)

## மாணவமணிகளே! டிச. 5-உங்கள் நாள்

### "செலக்ஷன் பரீட்சை ஒழிக!"

### தீவிரப் போராட்டம் நடத்துவீர்!

**வேண்டுமென்றே, மீண்டும் ஆச்சாரியார் சர்க்கார், S. S. L. C. படிக்கும் மாணவர்களுக்கு, செலக்ஷன் முறையை புகுத்துவதை எதிர்த்து டிசம்பர் 5ந் தேதியன்று (வெள்ளிக்கிழமை) பள்ளிக்குச் செல்லாமலும், ஊர்வலம், பொதுக்கூட்டம் ஆகியவைகளை நடத்தி, தமது கண்டனக் குரலை, அமைதியான முறையில் ஆளவந்தாருக்கு அறிவுறுத்துமாறு சென்னை மாநில திராவிட மாணவர் முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் தோழர் கே. ஏ. மதியழகன் விடுத்துள்ள அறிக்கை:**

"எஸ். எஸ். எல். சி. தேர்வுக்குச்செல்லும் மாணவர்களுக்கு செலக்ஷன்முறையை மீண்டும் புகுத்துவது என சென்னை சர்க்கார் முடிவு செய்துள்ளதை அனைவரும் அறிவர். பல லட்சக்கணக்கான மாணவர்கள் கல்வி வசதியே பெற முடியாத அவலநிலையில்உள்ள நாட்டில், தப்பித்தவறி கல்வி பெறும் மாணவர் முன்னேற்றத்தையும் கருக வைப்பது, இந்த ஏற்பாட்டின் மூலம் கல்விமுறைக்கோ, நாட்டு நலத்திற்கோ, நன்மையைவிட ஊறுகளே அதிகம் என்பதை கல்வித் துறையிலும், மற்ற துறைகளிலுமுள்ள சகல முற்போக்கு கருத்தினரும் ஒரே குரலில் பன்னிப்பன்னி சொல்லி வந்துள்ளனர். செலக்ஷன் முறையை மீண்டும் புகுத்தவேண்டுமென்று துடி துடித்துக்கிடக்கும் சர்க்காரின் கட்சிக்கும் இதுவிரோதமான கொள்கையல்ல. இதற்கு முன்பு மந்திரிசபையிலே இருந்தவர்கள் செலக்ஷன் முறையின் தீமைகளை உணர்ந்து ரத்து செய்தனர். அதை மீண்டும் உயிர்ப்பிப்பது என்று தற்போதுள்ள அரசாங்கம் கங்கணம் கட்டிக்கொண்டுள்ளது. செலக்ஷன் முறையைப் புகுத்தக் கூடாது என்று எழுந்த கண்டனக் குரலும்; அறிவுரைகளும் ஆளவந்தார்களின் செவியில் ஏறியதாகத் தெரியவில்லை. எனவே, பல்லாயிரக் கணக்கான மாணவ மாணவிகளின் வாழ்வைப் பாதிப்பதும், எதிர்கால சமுதாயத்துக்கு பேராபத்து விளைவிப்பதுமான செலக்ஷன் முறையை மீண்டும் புகுத்தக்கூடாது என்ற மாணவர்களின் எதிர்ப்பையும் நாட்டு மக்களின் கண்டனத்தையும் சர்க்காருக்குத் தெரிவிக்கும் 'செலக்ஷன் எதிர்ப்பு நாளாக, டிசம்பர் 5-ந்தேதி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. டிசம்பர் 5-ந்தேதிஎல்லா உயர்நிலைப்பள்ளி மாணவர்களும், தங்கள் பள்ளிக்கூடங்களுக்குச் செல்லாமல் ஊர்வலமாகச் சென்று பொதுக்கூட்டங்கள்கூட்டி "செலக்ஷன் முறை கூடாது" என்பது பற்றி தீர்மானங்கள் நிறைவேற்றி சென்னை முதலமைச்சருக்கும், கல்வியமைச்சருக்கும் (Director of Public Instruction) ஆகியோருக்கும் அனுப்பி வைக்குமாறு வேண்டுகிறேன்.

இந்தப் பிரச்சினை, எந்தக் கட்சியின் தனிப் பிரச்சினையுமல்ல. நமது எதிர்கால குடிமக்களுடைய வாழ்வு பற்றிய பிரச்சினை. இதில் எந்தக் கட்சியின் கோஷத்திற்கும் இடமிருக்கப் போவதில்லை. எனவே, சகல பகுதியினரும் இதில் பங்கு கொள்ள வேண்டுகிறேன். மாணவர்கள் "செலக்ஷன் முறையை மீண்டும் புகுத்தாதே" என்ற குரலைத்தான் எழுப்பவேண்டும். வேறு காரியங்களில் ஈடுபடவோ, மற்ற கொள்கைகளைச் சொல்லவோ, இந்த நாளை பயன்படுத்தத் தேவையில்லை. இந்தப் பிரச்சனைக்கு கட்சி, ஜாதி, மதம் ஆகிய எதும் குறிக்கிடக்கூடாது. குழி தோண்டிப் புதைக்கப்பட இருக்கிற தங்கள் உரிமைக்காக போராடும் புனிதநாள் என்பதை மாணவர்கள் நினைவில் வைத்து, டிசம்பர் 5ந் தேதியை வெற்றிகரமாக்க வேண்டிக்கொள்கிறேன். மாணவர்களுக்குத் தேவையான எல்லாவித உதவிகளையும் ஆங்காங்குள்ள திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் நிச்சயம் செய்து தருவார்கள். நாடெங்குமுள்ள உயர்நிலைப் பள்ளிகளிலுள்ள திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத் தோழர்கள் இந்தக் கிளர்ச்சியை முன்னின்று நடத்தி, இந்த முயற்சியை வெற்றிகரமாக்க திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வேண்டிக் கொள்கிறேன்.

திராவிடநாடு

காஞ்சி] 30—11—52 [ஞாயிறு

# டில்லி
# சுரண்டல் இயந்திரம்!

★

டில்லி தர்பார், ஆலையரசர்களின் பீடம் என்பதை, உலகமறிய ஒப்புக் கொண்டு விட்டது.

தென்னாடு எவ்வளவு தவித்தாலும், கவலைப்படாதது அது — என்பதை காட்டிக் கொண்டு விட்டது.

அவர்களின் ஆருயிர் நண்பராம் ஆச்சாரியார் முகத்தில் கரிபூசிய வண்ணம், இந்த முடிவுகளை, அறிவித்துள்ளது. சென்னைமாநிலசட்டசபையினர் ஏகோபித்துச் செய்த தீர்மானத்தை, ஏளனம் செய்வது போல, 'உத்தரவு' பிறப்பித்திருக்கிறது,

சாகும் கைத்தறியாளர்களைக் காட்டி, 'கரைபோட்ட வேஷ்டிகளையும் கலர்ப்புடவைகளையும்' ஒதுக்குமாறு, சென்னை கோரிற்று — டில்லியை.

ஏற்கவில்லை, டில்லி. ஏளனம் செய்வது போல, "அறுபது சதவிகிதம் அந்த உரிமை, ஆலைகளுக்குத்தான்!" என்று அறிவித்திருக்கிறது. 1951—52 உற்பத்திக் கணக்கில் 60o/o வேஷ்டிகளை நெய்யலாம் என்று ஆலைகளுக்குத் தெரிவித்துள்ளது.

உத்தரவு கேட்டது தறியாளர், கொடுமைதீர! ஆனால், அத்'தரித்திர நாராயணர்களுக்கு' 40o/o தந்துவிட்டு, 'ஆலைமுதலைகளுக்கு, 60 ஒதுக்கியிருக்கிறது.

இதற்குப் பெயர் 'சலுகை'யாம்!— கூறுகின்றன, தேசீய ஏடுகள்.

ஆச்சாரியாரைக் கேட்டதற்கு, 'ஈனஸ்வரத்தில்' பதிலளித்திருக்கிறார்.

நாட்டின் வேஷ்டித் தேவையை கைத்தறியால் சமாளிக்க முடியும் என்று பிரகடகோட்டையா போன்ற நெசவாளர் தலைவர்கள், புள்ளி விபரங்களோடு வெளியிட்டிருக்கிறார்கள்.

ஆனால், நம்பவில்லை, டில்லி! 'நம்பாதது'போல் நடிக்க விரும்புகிறது —ஆலைகளுக்குப் பரிவு காட்ட. அது பற்றி விசாரணை செய்ய 'கமிட்டி' நியமிக்கப்பட்டுள்ளதாம். ஒரு கண்ணில் வெண்ணெயும், மற்றோர் கண்ணில் சுண்ணாம்பும் தடவும் 'டில்லி' நியமித்ததாகக் கூறுகிறது, ஒரு கமிட்டியை! செத்து மடிவோருக்காக வாதாடினால், தெகிடுதத்த உத்தரவைப் பிறப்பிக்கிறது.

45 லட்சம் தறியாளர்கள் பிணமாகும் கோரம் கண்டும், ஆலைகளுக்குப் பரிவு காட்டுகிறது, டில்லி.

இந்த வேதனையைப் பாருங்கள்— இப்போதாவது கூறுங்கள் 'டில்லி தர்பார்' சுரண்டல்பீடமா இல்லையா என்பதை. ருதுமதிதானே சென்னை சட்டசபையின் தீர்மானத்தை, இவ்வளவுதூரம் ஏளனம் செய்வதற்குள்ள காரணம்? இல்லையென்று எவர் மறுக்கமுடியும்? ஏளனச் சிரிப்பு காட்டுகிறதே!

## திருமணம்

உமையாபரணச்சேரியில் 4—12—52 அன்று ஒய். என். ராமலிங்கம்— அலர்மேலு வாழ்க்கை யொப்பந்தம், காஞ்சி, கலியாணசுந்தரம் தலைமையில் நடைபெறும். பொதுச்செயலாளர் அண்ணாதுரை, சி. வி. எம். அண்ணாமலை, கே. டி. எஸ். மணி கலந்து கொள்வர்.

---

வாழ்க்கையைச் சூறையாடுகிறது வடநாட்டுத் தர்பார்!

மொழி—வாழ்வு—பொருள், எல்லாவற்றையும் சுரண்டிச்செல்கிறது!

*

வடநாடு வாழ—நாம் சாகிறோம்!

அங்குள்ள ஆலைகள் கொழிக்க, நமது தறியாளர் சாகின்றனர்!

நமது பட்டினிக்குரல், கவனிக்கப்படவில்லை! வரி, மட்டும் கோட்டித் தருகிறோம்!

*

'இது ஏன்?'! — என்று விம்மினால். 'நான்சென்ஸ்!' என்கிறது, டில்லி தர்பார்.

அதற்கு புத்தி புகட்ட,

உரிமைக் குரலை முழக்க

**தன்மானத்துக்காகப்**

**போராட**

**டால்மியாபுரம்**

**போராட்டம்**

திரமிக்கத் தோழர்காள்!

தயாராகுங்கள் !!

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

பலம் வளர்ந்திருப்பதன் விளைவுதான்.

இவ்விதம் வளரும் 'குரல் ஒலி', எங்கும் ஒழுங்காக எட்ட வேண்டும் என்கிற ஆவலால்தான், முப்பது ஆண்டுகளாக அறிவியக்கப் பணிபுரிந்து வரும் நமதியக்கத்தவர், அமைப்பு முறைக்கு அவ்வளவு முக்கியத்துவம் தந்து வருகின்றனர்.

அமைப்பு முறைகளோடு, தென்னாட்டிலுள்ள எல்லா கிராமங்களிலும் நமது கழகக் கிளைகள் இருக்கின்றன வென்று, வீம்பு பேசவில்லை, நாம். ஆனால், அங்கெல்லாம், நாமெந்த கொள்கைக்காகப்போராடுகிறோமே, அந்த எண்ணங்கள் இல்லை யென்று கூறமுடியாது.

சமுதாயத்தில் படுகுழியில் தள்ளப்பட்டிருக்கும் நாம், நம்மையே நம்பி பொது வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கிறோம்—வாழ்க்கையைத் துறந்த 'முனிபுங்கவர்' போலல்ல; வாழ்க்கைத் தொல்லைகளோடு போராடிக்கொண்டு.

இதனால் நம்மிடமிருக்கும் வசதிகள் மிகமிகக்கொஞ்சம். நாம் தாங்கியிருக்கும் கொள்கைகள், எங்கெங்கு பரவவேண்டுமெனத் துடிக்கிறோமோ, அதற்கான 'வசதியெனு'வும் அற்றோர், நாம். உலகிலேயே இத்தகைய, போராட்டத்துக்கிடையே, விடுதலை நாடிச்செல்லும், கழகம் நம்முடையதுதான். எனவே எல்லா இடங்களிலும் 'நாம்' இல்லை. ஆனால் எதிர்காலத்தில் 'எங்கும் நிறைவோம்' எனும் உறுதியும், ஊக்கமும் வேண்டிய அளவு நம்மிடம் உண்டு — அதற்கான வீரர்களும் இருக்கிறார்கள்.

சமுதாய விடுதலை!
பொருளாதார விடுதலை!
தாயக விடுதலை!

என்கிற அடிப்படைகளை நெஞ்சில் ஏந்தி, விரைந்து முன்னேறுகிறோம். இந்த முயற்சியின் வெற்றிக் கட்டமாகத் தற்போது, நம்முடைய கிளைக்கழகங்கள் யாவும், 'கோட்டைகள்'போல் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. நமது கொள்கைகளுக்காகப் போராடும் 'பாசறை'களாம், மாவட்டக் கழகங்களும், தி. மு. க-வை நடாத்திச் செல்லும், பொதுக் குழுவும் அமைக்கப்பட்டிருக்கின்றன—ஜனநாயக ரீதியில்.

பொது வாழ்வில் பொறுப்பேற்பதென்பது, இலேசானதல்ல. அதனையறிந்தும், நாட்டுக்குச் சேவை செய்யும் நல்லெண்ணத்தோடு, பொறுப்பேற்றிருக்கும் அனைவரையும் வாழ்த்துகிறோம்—நமது "எதிர்காலப் பூஞ்சோலையாம் இன்பத் திராவிடத்தை", மனதிலிறுத்தி, நாம் சாதிக்கவேண்டிய காரியங்களின் அளவையும் நினைந்து, அவர்கள் எல்லாம் பாடுபட வேண்டுமென்று, வாழ்த்துகிறோம். வரவேற்கிறோம். வாழ்க, நம் வீரர்கள்! வளர்க நம் கழகம்!!

## மாவட்டச் செயலாளர்கள்

சென்னை—
K. M. கண்ணபிரான் (சென்னை)
செங்கற்பட்டு—
C. V. M. அண்ணாமலை (காஞ்சி)
வட ஆற்காடு—
A. L. C. கிருஷ்ணசாமி (அரக்கோணம்)
தென் ஆற்காடு—
R. பாலகுருசாமி (சிதம்பரம்)
தஞ்சை—
K. K. நீலமேகம் (குடந்தை)
திருச்சி—
A. P. தர்மலிங்கம் (அம்பில்)
இராமநாதபுரம்—
சிவசண்முகசுந்தரன் (அருப்புக்கோட்டை)
நெல்லை—
S. வீரபாகு (நெல்லை)
சேலம்—
G. P. சோமசுந்திரன் (பேளுக்குறிச்சி)
கோவை—
E. V. K. சம்பத் (ஈரோடு)

*

மாவட்டங்களிலிருந்து, பத்துப் பிரதிநிதிகள் வீதம், பொதுக் குழுவுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டோர்:—

சென்னை
கே. கோவிந்தசாமி
இரா. நெடுஞ்செழியன்
என். வி. நடராசன்
அருண்மொழி
கே. எம். கண்ணபிரான்
சத்தியவாணிமுத்து
மணிமொழியார்
ஆர். பாண்டியன்
கா. அண்ணாமலை
எ. கே. சாமி
சி. வி. ராசன்
அ. பொ. அரசு.

செங்கற்பட்டு
சி. என. அண்ணாதுரை
அரங்கண்ணல்
காஞ்சி. கலியாணசுந்தரம்
சி. வி. எம். அண்ணாமலை
கே. டி. எஸ். மணி
என். ஜி. கண்ணப்பன்
எஸ். ஜி. பெருமாள்
டி. சபாபதி
தில்லை. வில்லாளன்
ஒய் என். ராமலிங்கம்

வட ஆற்காடு
பி. ராமலிங்கம்
ஆர். சம்பங்கி
கே. பி. சுந்தரம்
வி. டி. அண்ணாமலை
எஸ். டி. ராமசாமி
இளஞ்செழியன்
நெடுஞ்சோழன்
எல். சி. கிருஷ்ணசாமி
டி. ஜி. தங்கவேல்
என். எம். சலாவுதீன்

தென் ஆற்காடு
இரெ. இளம்வழுதி
ராசகோபாலன்
ஆர். பாலகுருசாமி
பழனியப்பா
சி. முனுசாமி
பெ நெடுமாறன்
டி. என். ஜி. அண்ணாமலை
ஓ நாராயணன்
என். இமயவரப்பன்
கனகசபாபதி

தஞ்சை
என். எஸ். இளங்கோ
மு. கருணாநிதி
டி. கே. சீனுவாசன்
கே. கே. நீலமேகம்
ப. நாராயணசாமி
எ. கே. வேலன்
ஆர். பழனிச்சாமி
எஸ். பெத்தண்ணன்
எஸ். கே. சாமி
வை. சுப்ரமண்யம்

திருச்சி
இராசா
ஞானமுத்து
இளமுருகு பொருட்செல்வி
கே. எ. மதியழகன்
முத்துக்கருப்பன்
செல்லப்பா
எம். எஸ். மணி
எ. பி. தர்மலிங்கம்
ஜி. பராங்குசம்
டி. பி. அழகமுத்து

இராமநாதபுரம்
எ. வி. பி. ஆசைத்தம்பி
எஸ். உத்தண்டன்
சிவ. சண்முகசுந்தரன்
எம். எஸ். ராமசாமி
இராம. சுப்பையா
இராம. வெள்ளையன்
சவுந்திரபாண்டியன்
ஆ. சுப்பையா
சேதுராமன்
து. உ. ராமநாதன்

நெல்லை
எஸ். கலிங்கன்
இராசு—தங்கப்பழம்
எஸ். கந்தசாமி
வி. புகழேந்தி
எம். எஸ். சுவசாமி
வீரபாகு
டபள்யு. டி. துரைசாமி
ஆர். பாண்டியன்
எஸ். நடராஜன்
எம். ரத்தினம்.

சேலம்
ஜி. பி. சோமசுந்திரம்
ப. கண்ணன்
இரா. ஜெகநாதன்
பி. ஆர். சோமசுந்தரம்
பி. ராமலிங்கம்
இரா. தாண்டவன்
பி. எம். குப்புசாமி
ரா. வரதராசன்
கே. எ. நடராசன்
இ. ஆர். கிருஷ்ணன்

கோவை
ஈ. வி. கே. சம்பத்
எஸ். அப்பாவு
கே. எ. மதியழகன்
பி. பழனிச்சாமி
எஸ். ஆர். சந்தானம்
ஜி. என். ராசு
எஸ். எ. ராசமாணிக்கம்
வி. சண்முகநாதன்
பி. எம். பொன்னுசாமி
சி. எஸ். சின்னதுரை

## மாவட்ட துணைச் செயலாளர்களும் பொருளாளர்களும்

சென்னை
க. சிதம்பரம்
எ. கண்ணப்பன்

செங்கற்பட்டு
டி. சபாபதி, என். ராமலிங்கம்

வட ஆற்காடு
கருத்தோவியன்
தேவராசன்

தென் ஆற்காடு
ஆ. தங்கவேலு
இராம. பழனிச்சாமி

தஞ்சை
எ. வி. பதி, பராங்குசம்

திருச்சி
ஜி. பராங்குசம்
து. ப. அழகமுத்து

இராமநாதபுரம்
இராம. வெள்ளையன்
சவுந்திரபாண்டியன்

நெல்லை
எஸ். கந்தசாமி
எம். எஸ். முத்துக்குட்டி

சேலம்
வி. ராமலிங்கம்
பி. எம். குப்புசாமி

கோவை
செழியன்
எஸ். ஆர். சந்தானம்

# வித்தியாசம், குரலளவில்!

"பிணங்கள் வீதியில் கிடக்கின்றன, பிரபு!"

"பரவாயில்லை — புதிதாகக் கொண்டுவரப்பட்ட பட்டாடைகளையும், பழ ரசத்தையும் கொண்டுவரச் சொல்"

"பசி! பசி!! — இந்தக் கூக்குரல்' சகிக்கமுடியவில்லை, மன்னா"

"ஜனங்கள்தானே? அப்படித்தான் கூச்சல் போடுவார்கள். அது கிடக்கட்டும்; அரண்மனை மாடியிலே அழகாக உலவும் நாய்களுக்கு, கழுத்தில் என்ன மணி போடலாம், சொல்?"

*

குமுறல், கூச்சலாகத் தென்பட்டது. 'ஜனங்கள்தானே? ஜனங்கள் அப்படித்தான் கூச்சல் போடுவார்கள்' என்று கூறினான், ஜனங்களை ஆளும் பொறுப்பேற்ற மன்னன். துடியிடை துவள, கனியிதழ் காட்டி, கரத்திலே மதுவும், கண்களிலே காமமும், இடையிலே பட்டாடையும், மேனியிலே 'வைர' ஜொலிப்பும் நிரம்பியவளாய், மகாராணி வந்தாள். 'கண்ணே!' என்று அழைத்தான், மன்னன். கனிரச வல்லியின் அழகையும் ஆடம்பரத்தையும் கண்டான். 'காதலா!' என்றாள், அவள். 'அன்பே' என்றான்! 'பார்த்தீரா, இந்த நெக்லசை. வைரம்! அற்புதமான வைரம்!!' என்று, கழுத்தில் பிரகாசித்த, அந்தக் கல் பதக்கத்தைக் காட்டினாள். "ஆகா! அற்புதமடி, மயிலே. கழுத்தில் கிடக்கும் இப்பதக்கத்தைக் காணும்போது, உன் இதழோரத்தில் ஒளிவிடும் பற்கள் இங்கே எங்கே வந்தன? என்று திகைப்புக் கொண்டேன், நான். சித்திராங்கி! செம்பவள வாயில் ஜொலிக்கும் வைரப் பற்களை போட்டியிட அழைப்பதுபோலிருக்கிறது. உன் வைர நெக்லஸ்!" என்றான். குழைந்தான், மன்னன். குறும்புச் சேட்டைகளைத் துவங்கினான். கொஞ்சு மொழிகளோடு, பஞ்சணை ஆடலாயிற்று! ஆனால், மாளிகையின் எதிரிலோ, துரும்புக் கூட்டம் போல், வாழமுடியாதவர்கள் நின்றனர்! உள்ளே, இன்பச் சிரிப்பு — வெளியே துன்பக் குமுறல்.

*

'வாழமுடியாதோர்' கூட்டம் அதிகரித்துக்கொண்டிருந்த காலத்திலே, வைர நெக்லஸ் வாங்குவதிலும், வீட்டு நாய்களுக்குப் பட்டு மெத்தை" தைப்பதிலும், விருந்திலும், விழி வீச்சிலும், காலத்தைக் கழித்துக்கொண்டிருந்தான், பிரெஞ்சு மன்னன் என்று படித்திருக்கிறோம். மக்களை மறந்து இன்பப் போதையில் திளைத்ததால், பொக்கிஷம் வரள, பிரபுக்களை அண்டி கடன் கேட்டு, அவர்கள் தம் கைப்பாவையாக ஆகவேண்டிய சூழ்நிலைக்கும் ஆளானான், அவன். மாளிகையிலே 'மதன் ரதி' கேளிக்கைகள்! நாட்டிலோ, எலும்புக் குவியல்!!—இந்த ரசாபாசம் வளர்ந்ததால்தான், பல கிரீடங்கள், கவிழ்ந்தன. அரசுகள், ஒழிந்தன. வயிற்றுப் பசியால் வாதைப்படுவோர் கூட்டம் வளரவும், 'வைரத்தால்' தம்மை அலங்கரிக்கும் மனோபாவம் மாளிகைகளில் மாறாமலிருந்ததுமே மக்கள் விழிகளில் வீரத்தையும் இதயங்களில் புயலையும் எழுப்பலாயிற்று, என்று சரித ஏடுகள் கூறுகின்றன. "மன்னன் மகேசன் பிம்பம்!" என்று நம்பிக்கொண்டிருந்த மக்கள்கூட, பசிக் கொடுமை தாளாமல், 'மகேசனின் பிம்பமாயிருந்தாலென்ன?' என்று குமுறிக் கொந்தளித்து, வீறுகொண்டெழுந்திருக்கின்றனர். பசி ஒருபக்கம்! படாடோபம் மற்றோர்பக்கம்!! பலரிடம் பதைப்பு! சிலரிடம் வாழ்வு!! —இந்த, ஏறுமாறுநிலை, எங்கேயிருந்தாலும், அங்கு அமைதியைக் காணமுடியாது. வாழப்பிறந்த மனிதக் கூட்டத்தின், சாதாரணப் பிரச்னை, உணவு. இதற்குப்பின் தான்—தேசம், ஞானம், சுபிட்சம்—சுகம், எல்லாம். இந்தச் சாதாரணப் பிரச்னையின், விளைவையும் அளவையும், மறந்த காரணத்தாலேயே மன்னாதி மன்னர்கள் கவிழ்க்கப்பட்டார்கள். மாளிகைகளைக் காவல் காக்கும் நாய்களுக்கு, மாமிசம் மலை போல் குவிக்கப்பட்டிருப்பதைப் காணும் ஏழையின் உள்ளம், 'எனக்கு ஒரு கவளம் இல்லை. ஆனால் நாய்களுக்கு இவ்வளவு உபசாரம்!' என்று, எண்ணாமலிருக்காது. அத்தகைய எண்ணம், பூத்துவிட்டால், ஏழை புலியாகிறான்! எதைக்கண்டாலும் தாக்குகிறான்! கிடைத்தளவு கைப்பற்ற முயல்கிறான்! வெறி, வெற்றிநடை போடுகிறது. அந்த வெறி, எழும்பாத இடங்களிலே, தன்னைத்தானே நொந்துகொண்டு, 'சர்வேசா!' என்று பிரலாபித்தவண்ணம், மரத்துக் கிளையையோ, ஆற்று வெள்ளத்தையோ, ரயில் தண்டவாளத்தையோ, நாடிச்செல்லவேண்டியவனாகிறான். ஒரு நாட்டில், இந்தக் 'கட்டம்' ஏற்பட்டுவிடுகிறதென்றால், ஆபத்து அரும்புகிறது, என்று அர்த்தம். திசை மாறுகிறது! தேசம், புரட்சிப்பாதையில் நடைபோட ஆரம்பிக்கிறது என்று பொருள். இந்த 'எச்சரிக்கை'யை, அரசுக்கட்டில், ஏறியோர், உணராவிட்டால், விளைவு விபரீதமாகிவிடும் —வேதனையும் குழப்பமும்தான் அரசோச்சும்.

பசித்த மக்களைப்பார்த்து, "மக்களே! பதறாதீர்கள்—மகேசன் காப்பார்" என்று சொல்லலாம்.

"துடிக்காதீர்கள்—என்செய்வது? தொல்லைகள் தீரட்டும்" என்று, கூறலாம்.

"நாட்டின் பெருமை, அகில உலகிலும் விளங்க வேண்டாமோ? ஆகவே, சிறிது, பொறுத்துக்கொள்ளுங்கள். அழகான கப்பல்களும், ஆழத்திற்செல்லும் சப்மரீன்களும், ஆகாயத்தை வட்டமிட விமானங்களும், உற்பத்தி செய்தானதும், பசிப்பிரச்னையைத் தீர்த்து விடுகிறோம்" என்று, பலமுறை, தெரிவிக்கலாம்.

தெய்வம்! தேசம்!! — இவ்விதம் பேசி, மக்கள் மன்றத்தில் வளர்ந்து கிடக்கும், இவ்விரு 'பக்தி'களையும் தமது ஆட்டக்காயாக்கி, அதனால் அரசியல் சதுரங்கத்தில் ஆடுகிறனைப்பது, பித்துப்பிடித்தோன்நடத்தும் கூத்தாகவே, முடியும். 'நெக்லஸ்' வாங்கி, நெஞ்சு நெகிழ்த்தாளுக்கு அணிவித்துவிட்டு, வயிறுகாட்டி அலறுவோரைப்பார்த்து, ஐயனையும் மெய்யனையும் — நாட்டையும் நல் திட்டங்களையும்—உரைப்பதால் பயன் என்ன காணமுடியும்? 'வீடு தீப்பற்றி எரியும்போது, அழகான 'சிகிரேட்'டுக்கு நெருப்பு தேவை' யென்று கேட்டால் அவனைப் பார்த்து சிரிப்பர், மக்கள்—கோபம் வராவிடில். குட்டுவர், தலையில் 'குறும்புக்காரன்!' என்று கூறிய வண்ணம் கோபம் வந்தால்.

மக்கள் மாளும் நேரத்தில், மாளிகைக்கு 'கலர்' பூசுவதும், மகேசனைக் காட்டுவதும், தேசத்தின் பூர்வோத்திரப் பெருமையைவடித்துத் தருவதும், பனிக்கட்டியைக் காட்டி. நெருப்பிடம் விளையாடும், விளைவையே தரும்.

"மன்னர்கள் மதோன்மத்தர்கள் மக்களை மதிப்பதில்லை — ஆகவே, அவர்கள் ஏந்தியிருக்கும் கிரீடங்களைக் கழற்றிவிட்டு, மக்களாட்சியை மலர்விக்கவேண்டும். அதைத்தான் செய்கிறேன், நான்." என்று பண்டித நேரு அவர்கள் பரவசத்தோடு கூறும்போது மகிழ்வடைண்டு. "பாரீர் காஷ்மீரத்தை! மன்னன் அகந்தையை ஒடுக்கினேன். அவன் இப்போது, மன்னனல்ல! 'மன்னன்' என்கிற மணிமகுடத்தைஉடைத்துவிட்டேன்! இப்போது, அவன் மக்களாட்சியின் தலைவன் — ராஜபிரமுகர்தான்!' — என்று அவர் அறிவிக்கும்போது, ஒருவனின் தேவைக்கே இருந்ததேசம் — எல்லோரது தேவைக்கும் உரிமையாக்கப்படுகிறது என்று ஆனந்தமடையத்தூண்டும். இந்தக் காட்சிகள், பண்டிதநேருவுக்கு, மக்களாட்சியின் பாலுள்ள ஆசையின் பிரதிபலிப்பன்றே, கருதத்தூண்டும்.

ஒருவனின் தேவைக்காக—அவனது சப்ரகூட மஞ்சத்து ராணிகளுக்காக — சல்லாபத்துக்காக — உல்லாசத்துக்காக — கோடிக்கணக்கான மனித ஜீவன்களும், ஒருதேசமும் இருப்பது, நீதிக்குமுரண்! நேர்மையல்ல!!—என்ற எண்ணம், முகிழ்ப்பது, மக்களுக்கு உரிமை தரும் காரியமாகும் இந்தக்காட்சியைக்காண, கல்லறைகளுக்குத் தம் வாழ்வை ஒப்படைத்தோர் தொகை ஏராளம். ஜனநாயகம்! மக்களாட்சி! —எனும் குரல் எழுப்பி, அந்த முறை உலகில் நிலவப் பாடுபட்டோர் பலர் — பாடுபடுவோர் ஏராளம். அத்தகைய நல்லெண்ணம் முகிழ்ப்பது, மனித நீதியை உணர்வதுபோன்றதாகும். அதனால்தான், கிரீடங்களின் கித்தாப்புகளைஒழிக்கவும், ஜனநாயகம் தழைக்கவும் தான் பாடுபடுவதாகப் பண்டித நேரு கூறும்போதெல்லாம் — மகிழ்வடைண்டு நாம். "ஒருவனின் தேவைக்காக," எனும் நிலைமாறி, "மக்களின் தேவைக்காக" என்கிற புதுநிலை மலரவேண்டும். அவ்விதம் மலர்ந்தால் ஏழை வாழ்வான்! எத்தனொழிவான்!! என்கிறஆசையால்தான் மணிமகுடதாரிகள் கவிழ்க்கப்படுவதை அறியும்போது, நாம் மகிழ்

(6-ம் பக்கம் பார்க்க)

## "பராசக்தி" ஒரு அத்தியாயம்!

[நேஷனல் பிச்சர்சாரால் தயாரிக்கப்பட்டு, மக்களின் பேராதரவைப்பெற்று, வெற்றி முரசு கொட்டிக்கொண்டிருக்கும் "பராசக்தி"— திரைப்படம், மலையாளத்திலும், கன்னட மக்களிடையிலும் பாராட்டுதலைப் பெற்றுக்கொண்டுள்ளது. மேற்படி படத்தைப் பாராட்டி, கன்னட இதழான "பிரஜாமதா" எனும் வாரஇதழ், புளகாங்கிதத்தோடு, தீட்டியிருக்கும் விமர்சனம் இது. 'பிரஜாமதா'வின் ஆசிரியர், டில்லி பார்லிமெண்டு உறுப்பினரான M. S. குருபாதசாமி M. A., L. L. B. ஆகும். பிரஜா—சோஷியலிஷ்டுக் கட்சியைச் சேர்ந்தவர் அவர். அவருடைய இதழில், 'ரூபவாணி' எனும் தலைப்பில், திரைப்படவிமர்சனம் செய்பவர் கலஸ—சத்யநாராயண B. Sc., (Hons) B. L ஆகும். கற்றறிந்த அவர்களது, உள்ளப்பூரிப்பைக் காண்க:—]

"கருணாநிதி அவர்களின் திறமைமிக்க எழுதுகோல்—எல்லா வர்க்கப் பார்வையாளர்களின் மதிப்பையும் பெற்று—சித்திரத்தை உயிர்ப்புள்ளதாக்கியுள்ளது

பராசக்தி—ஒரு உத்தம சித்திரம். அவசியம் பார்க்கத் தக்கது. கிருஷ்ணன்—பஞ்சு, ஸ்ரீரஞ்சனி, கணேசன் மதிக்கத்தக்க நிலையைப் பெற்றுள்ளார்கள்.

திறனை எழுதுகோல்! சரியான ஒரு பொருளை — திறமைமிக்க எழுதுகோலால்—மிகஉயர்ந்த நிலைக்குத் திருப்பி—ஏராளமான மக்களை விரிந்த உள்ளத்துடன் கண்டு களிப்படையச் செய்யமுடியும் என்பதற்கு பராசக்தி ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. உரையாடல் தீட்டிய கருணாநிதியவர்களே இச்சித்திரத்தின் இதயமும்—சத்தும். பொது மக்களைத் தன்பால் கவரும் பெருந்திறன், மதிப்புக்குரிய கருணாநிதியவர்களிடம் இருக்கிறது. இன்றைய நம் சமூகத்தை அநியாயமும், அசத்தியமுமே ஆட்சி செய்வதால் —மக்களிடையே சோம்பலின்மை (நிராசக்தி) தோன்ற ஆரம்பித்திருக்கிறது. நம் சர்க்காரின்மீதும், நம் சமூகத்தின்மேலும், நமது ஆசாரங்களின்மேலும், நம்முடைய நியமங்களின்மேலும் — நாம் விரும்பாவிடினும் — இயற்கையாகவே — ஒருவிதமான அவமதிப்பு தோன்றியிருக்கிறது. இதற்கு முக்கிய காரணம் இன்றைய தலைவர்களின்—செயலின்மையும் (கர்மப்ராஷ்டதை) ஒழுக்கசீலர் என்பவர்களின்—அறப்பற்றின்மையும், சீமான்கள் என்பவர்களிடம்உள்ள நீதிப்புறக்கணிப்புமேயாகும். இந்த செயல், அறம், நீதி ஆகியவைகள் சரியாக நடைமுறைக்கு வருகிறவரையில் நாட்டில் அமைதி தோன்றாது; சமூகமும் தலை தூக்கமுடியாது. மக்களும் சுகம்பெற இயலாது. "வாழவேண்டும், எல்லோரும் வாழவேண்டும்," இந்த எல்லோரும் வாழவேண்டும் என்ற சீரியகுறிக்கோள்—ஒவ்வொருவரிடமும் தோன்றினால் அல்லாமல் —தேசத்தில் சுக—சாந்தி காண இயலாததாகும். இக்குறிக்கோளின் முதன்மையைச்சார்ந்து "பிச்சைக்காரர்மாநாடு" நடத்தப்பட்டாலும் அதில் துக்கப்பட வேண்டியதில்லை! நமக்கு சுதந்திரம் கிடைத்த பிறகு, ஒவ்வொரு பிரஜைக்கும் — ஆட்சி அலுவல்களில்—பங்குஉண்டு. ஒவ்வொருவருக்கும்—வாக்குரிமை இருக்கிறது. இங்ஙனமிருத்தலால், சாமான்ய மக்கள் நிலை ஒருபுறமிருக்கட்டும் — பிச்சைக்காரர்கள்கூட விழிப்படைந்து — சமூகப் பாம்புகளை — எதிர்க்கவேண்டும். அப்போதுதான், ஆட்சியில் விழிப்பு ஏற்பட்டுத்தீரும். இந்த ஒரு நற்சேதியை "பராசக்தி"யின் வாயிலாகப் போதிக்க கருணாநிதி முயன்றிருக்கிறார். இச்செய்தி நல்வரவுக்குரியது. உரியகாலத்தில், மக்களின் உரிமைகளை உணரச் செய்யும் காரியத்திற்கு படப்பிடிப்பாளர்கள் முயற்சித்திருப்பது—சிலாக்கியமானதாகும். நூற்றுக்கணக்கான தலைவர்களின் சொற்பொழிவுப் பலனை—கருணாநிதியைப்போன்ற வெற்றிமிக்க எழுத்தாளர்களின் துணைகொண்டு பிடிக்கப்படும் படம் சாதிக்கவல்லது. மக்கள் தலைவர்கள் எனப்பட்டவர்கள் இச்சித்திரத்தை அவசியம் பார்க்கவேண்டும். சர்க்காரும், இச்சித்திரத்தைக் குறித்தும், இதுபோன்ற சித்திரங்களைக் குறித்தும் — உதார மனோபாவம் காட்டவேண்டும். மக்களிடையே ஒரு மாற்றம் ஏற்படுத்த வல்ல, கருத்தோட்டம் தரவல்ல— வாழ்க்கைமீது பற்று ஏற்படுத்தக் கூடிய சித்திரங்களில் — இது ஒரு புதிய அத்தியாயத்தை ஆரம்பித்துள்ளது. அதனாலேயே விமர்சகரின் பேனாவும் மகிழ்ச்சி கொள்கிறது. ரசமான சம்பாஷணைகளாலேயே ஒரு படத்திற்கு எவ்வளவு உயிரூட்டமுடியும் என்பதற்கு இப்படமே சாட்சி. இத்தகைய படங்கள் நிறைய திரைக்குவந்து தலைவர்களுக்கும் மக்களுக்கும் விழிப்பூட்டுமாக!

★

இருளில் ஒளி...

# ராஜாராம் மோகன்ராய்

[ புகழேந்தி ]

1788-ம் ஆண்டு ஒரு நாள், கடும் புயலுக்கு மத்தியில் காடுமுரடான பாதையில் உலகின் கூரை எனப்படும் திபேத்திற்குச் செல்லும் வழியில் வீட்டைவிட்டு வெளியேறிய அந்த இளைஞன் நடந்தான். வரைமுறையற்ற அந்தப் பாதையில் வழித்துணை ஏதுமின்றி உறுதியை, உறுதுணையாய்க்கொண்டு உற்சாகமாக நடந்தான் அந்தப் பதினாறே வயதுடைய இளைஞன். முழு உணவும் கிடைக்கவில்லை அவனுக்கு. கிடைத்ததை உண்டான்; கண்ட இடத்திலெல்லாம் கண்ணயர்ந்தான். கிணற்று நீரே அவனது வயிற்றை நிரப்பப் பெரிதும் உதவியது. இதயத்தில் அன்புசுரக்க 'எங்கேயப்பா போகிறாய்' என்றோ, 'ஏனப்பா போகிறாய்?' என்றோ கேட்பவர் எவருமின்றி மனதில் உருவாகாத முடிவோடு சென்றான் அவன். "இந்து மதத்தில் பொய்யும் புரட்டும் ஏராளம். இதனைத் திருத்த வேண்டியது மிக மிக அவசியம்" என்று கூறியதற்காக வீட்டை விட்டுத் துரத்திய தந்தையும் அன்பே உருவான அன்னையும் அவனது மனக்கண்முன் வந்து நின்றனர். எனினும் இதயத்தை இரும்பாக்கி, கனிவு தவழும் முகத்தைக் கடுகடுப்பாக்கிக்கொண்டு திபேத்தை நோக்கிப் பயணம் செய்தான் அவன்.

வழியில் ஒரு ஊரினைக் காணும் வாய்ப்புக் கிடைத்தது அவனுக்கு. ஊரையடைந்ததும் அங்கு ஊர் மக்களின் பெருங் கூட்டமொன்றைக் கண்டான். 'என்ன அந்த இடத்தில்' என்று ஒருவரிடம் கேட்டான் "சுடலை அது. பிணத்தைச் சுடுவார்கள் அங்கு" என்று சொன்னார் அவர். அதனைக் காணும் ஆவல் அதிகரித்தது, கும்பலின் மத்தியில் நுழைந்தான். வேதனை அவனை வாட்ட கண்களிலிருந்து கண்ணீர் வெள்ளம் கரைபுரண்டோட விம்மலுக்கு மத்தியில் அந்தக் காட்சியைக் கண்டு திடுக்கிட்டான் இளைஞன்.

அழகின் அத்தனை பகுதிகளையும் ஒருங்கே பெற்ற, பருவம் துள்ளும் பெண்ணொருத்தி மாண்டுபோன அவளது கணவனின் பிணத்தோடு கொளுத்தப்பட்டாள் அங்கு. அவளது முகம் காட்டிய அந்தச்சாயல் இன்னும் வாழவேண்டும் என்ற அவளது ஆசையை எடுத்துக் காட்டியது. ஆனால் அதைக் கவனிப்போர் யாருமில்லை. உயிரோடு அவளைக் கொளுத்தும் அந்தச் செய்கை, சந்தனச் சேற்றை சாக்கடை நீரில் கொட்டும் எண்ணத்தை அவனுக்குக் கொணர்ந்தது. கொழுந்துவிட்டெரியும் அந்த நெருப்பு மண்டலத்திற்கு மத்தியில் அவள் புழுப்போலத்துடித்தாள். 'ஐயோ' என்ற அவளது அழுகுரல் அஞ்சா நெஞ்சினரையும் நெகிழவைத்து விடக்கூடியதாக இருந்தது. ஆனால் அங்கிருந்தவர்களோ இன்னும் அதிகமாக தீமூட்டத் தொடங்கினர். அவளது அழுகையைக் கேட்ட பெரியவரொருவர் "அபசாரம்... அபசாரம்; அழுதால் ஆண்டவனின் தண்டனைக்குள்ளாவாய்..." என்று கூறியபடி கன்னத்தில் போட்டுக் கொண்டார்!

இந்தக் காட்சி இடி விழுந்ததைப் போன்ற உணர்ச்சியை ஏற்படுத்திவிட்டது அவனுக்கு. 'நெருப்பிலும் வைத்து விட்டு வேகும் உடம்பில் விநாடிக்கு விநாடி அதிகரித்துக் கொண்டே போகும் வேதனையைப் பொறுக்கமாட்டாமல் அவள் அழுவதும் கூடாது என்று கூறுகிற அவர்களை நிலம் பிளந்து விழுங்காதா?' என்றுகூட எண்ணினான் அவன். 'அந்தப் பெண் பொசுக்கப்படுவதற்குக் காரணம் எதுவாக இருக்கும்?' என்று தனக்குள்ளேயே அவன் கேட்டுக் கொண்டான். கள்ளியாகவோ கொலைகாரியாகவோ இருப்பாள் அவள் என்றுகூட அவனால் நம்ப முடியவில்லை. எனவே, சேதியை எப்படியாவது தெரிந்துவிடவேண்டி தீ வைத்தல் நிகழ்ச்சியை வெற்றிகரமாக நடத்திவைத்த வைதிகப் பார்ப்பனரொருவரை அணுகினான் அவன். 'ஏன் இப்படி அவளை?' என்று அரைகுறையாகக் கேட்டான் அவரை. அவனால் சரியாகக்கூட வார்த்தைகளை வெளியிட முடியவில்லை. துக்கம் அவன் தொண்டையை அடைத்தது. ஆனால் அந்தப் பார்ப்பனரோ எவ்வித உணர்ச்சியையும் காட்டாமல் 'அவளதுகணவன்மாண்டுபோனான்' என்றார். அவரது பதில் அவனுக்கு விளங்காத புதிராக இருந்தது. 'கணவன் மாண்டதற்காக அவளை ஏன் பொசுக்க வேண்டும்?' என்று அவன் மீண்டும் கேட்டான். அவனது கேள்வியைக்கேட்ட அவர் தனது முகத்தில் ஆச்சரியக் குறியை வரவழைத்துக்கொண்டார். அவரது குரலில் அலட்சியம் ஊடுருவியது. 'இதுகூடத் தெரியாதா உனக்கு? கணவன் மாண்டால் மனைவி உடன் கட்டை ஏற வேண்டும். அப்பொழுதுதான் ஆண்டவனின் சொர்க்க சாம்ராஜ்யப் பிரஜையாக அவள் இருக்கமுடியும். இந்து மதத்தில் இதற்குச் சான்று ஏராளமாக இருக்கிறது...இது உனக்குத் தெரியாதது புதுமையாகத்தோன்றுகிறது எனக்கு...' என்றார் அவர். 'இந்து மதமா...' என்றபடி மேலே நடந்தான் அவன். ஏராளமான கண்கள் அவன் ஏதுமறியாத சிறுவன் என்று கூறுவதுபோல ஏளனப் பார்வையைச்சிந்தின அவன் மீது. சிந்தித்தபடியே நடந்தான் இளைஞன். முதலில் தன் தந்தையிடம்பேசியது முற்றிலும் உண்மை என்ற முடிவுக்கு வந்தான் அவன். உடன்கட்டை நிகழ்ச்சி அவனை உலுக்கியது. இந்து மதம் இதயமற்றவர் மதம் என்ற உணர்ச்சியை ஊட்டியது அது. 'அதனைத் திருத்துவேன். அதற்காக உயிர் விடவும் தயங்கேன்' என்ற சூளுரையை எடுத்துக்கொண்டான். பின்னர் தீமைதரும் விலங்குகள் பலநிறைந்த காடுகள் பலவற்றைக் கடந்து திபேத்தை அடைந்தான் இளைஞன்.

திபேத், இலட்சியத்திற்காக தன் தந்தையையும் தாயையும் சொந்த நாட்டையும் துறந்துவந்த அந்த இளைஞனை வரவேற்று உபசரித்து விடவில்லை. அதற்குப் பதிலாக அவனது உயிரையே பலிவாங்கத்திட்டமிட்டது அது. ஆம்... அப்போது திபேத் மனித இதயமற்ற அறிவுக்குப் புறம்பான கருத்துகளைத் தன்னகத்தே கொண்டிருந்தது. ஆண்டவனின் அவதாரங்கள் எனப்பட்டோர் ஆட்சி அங்கே. அங்குள்ள பக்திமான்கள் அழகிய இளைஞர்களைப்பிடித்து ஆண்டவனுக்குப் பலியிட்டு வந்தனர். திபேத்திற்கு யாருமற்றவராகச் சென்ற அந்த இளைஞனும் பலிபீடத்தில் நிறுத்தப்பட்டு பின்னர் இரக்க உள்ளம் படைத்த சில பெண்களால் விடுவிக்கப்பட்டான். விடுதலையடைந்த அவன் காட்டுமிராண்டித்தனமான செயல்புரியும் அந்தப் பக்திமான்களை எண்ணிவருந்தினான். திபேத்தைப் பீடித்திருக்கும் இக்கேட்டை நீக்கி உண்மைக் கடவுளன்பை உணர்த்தி அவர்களின் இதயத்தை உயர்ந்த கருத்துகளால் நிரப்ப நினைத்தான். 'தனியாகவா? அதிலும் மறுமலர்ச்சிப் பாதைக்குச்சிறிதும் பண்படாதவர்களிடமா......?' என்ற எண்ணம்நினைப்பைத்தடுத்து நிறுத்திவிட்டது. எனவே, வேறு வழியின்றி வந்தவழியாக இந்தியாவுக்கே திரும்பினான் இளைஞன். மூன்று ஆண்டுகள் வட இந்தியா பூராவும் வலம் வந்தான். அவனது அறிவுப் பசிக்குத்தேவையான நூல்களை அங்கங்கே கற்றான். இறுதியில் தனது பத்தொன்பதாம் வயதில் எந்தத் தந்தையிடம் 'மோதி' வீட்டைவிட்டு வெளியேறினானோ அதே தந்தையிடம் சொந்தஊரான வங்காளத்தைச் சேர்ந்த இராதாநகருக்கு வந்துசேர்ந்தான். அங்கிருந்தபடியே இந்து மதத்தையும் பிறமதங்களையும் ஒருங்கே ஆராயத் தொடங்கினான் அவன்.

அந்த இளைஞன்தான் இந்துமதத்தில் பல புதிய சீர்திருத்தங்களைச் செய்து புகழ்பெற்ற இராஜாராம் மோகன்ராய். இந்து மதத்திலுள்ள பொய்யையும் புரட்டையும் எடுத்துக்கூறியதற்காக வீட்டைவிட்டு வெளியேறியமோகன்ராய் பார்ப்பன குலத்தில் தோன்றியவர். பார்ப்பனராக இருந்தும் பார்ப்பனர்களுக்கே பெரிதும் பயனும் பலனும் தருகிற இந்து மதத்தைக் குறைகூறுவோர் இந்தியத் துணைக்கண்ட வரலாற்றிலேயே இரண்டொருவர். அவர்களுள் முதன்மையானவர் மோகன்ராய், என்றால் அதில் எள்ளளவும் சந்தேகமில்லை. இந்துமதம் எதிரிகளில்லாத இணையற்ற மதமாகவே திகழ்ந்தது. அதன் கொள்கைகளுள் ஒன்றினைத்தவறு எனக்கூறிடுவோர் படும் தொல்லைகள் அளவிடக்கூடியதல்ல. வைதிகத்தின்வப்புப்பார்வை சனாதனத்தின் சல சலப்பு, புராணிகத்தின் பித்தலாட்டம், பார்ப்பனியத்தின் பழிவாங்குதல் இத்தனையும் வாட்டும் இந்துமதம் குறையுடையது என்று கூறிடுவோரை! அப்படிப்பட்டகாலத்திலேதான் மோகன்ராய் பொய்மூட்டைகளால் நிரம்பிக் கிடக்கிறது இந்து மதம் என்பதை எடுத்துக்காட்டினார். மதம் என்று கூறிய உடனேயே கோபப்பார்வையோடு 'அதுபற்றிப் பேசாதே' என்று தடைபோடும் கோமான்கள் இந்தக் காலத்திலேயே ஏராளம். மோகன்ராயின் காலமோ மூடநம்பிக்கைகளின் இருப்பிடமாயிருந்த காலம். மதம்தான் வாழ்வு, பக்தியே பண்பாடு, சம்பிரதாயமே சட்டம், சாஸ்திரிய முறையே சன்மார்க்கம் என்றிருந்த காலம். வேதம் ஓதுவோரின் வார்த்தைகளுக்கு வேறு பதில் வார்த்தைகளே கிடையாது. அவ்வளவு அவர்களுக்குச் செல்வாக்கு இருந்தது மக்களிடம். ஆனாலும் மோகன்ராய் அதைக்கண்டும் அஞ்சவில்லை. 'கடவுளுக்கும் மக்களுக்கும் மத்தியில் புரோகிதர்களும் மதத் தலைவர்களும் இருப்பதில் பொருளே இல்லை' என்று எடுத்துக் காட்டினார்.

கடவுளுக்கு கணக்கற்ற பெயர்களையும் பல உருவங்களையும் உண்டாக்கிக் கடவுள் தன்மைக்கே அவமானம் விளைவிப்பதைக்கண்டு உள்ளம் கொதித்த அவர் 'உருவவழிபாட்டால் மக்களுக்குத் தீமையேயன்றி நன்மையில்லை. உண்மையில் ஆண்டவன் அவ் உருவங்களில் இல்லை. ஆண்டவன் அவ் உருவங்களில் உள்ளான், எனக் கூறித் தொழுதிடும் இந்து மக்களின் குருட்டு நம்பிக்கைக்கு எல்லையேயில்லை. அவ் உருவங்கள் பேசுவதாகவும், பலகாரியங்கள் செய்வதாகவும், பற்பல வடிவங்களை அப்போதைக்கப்போது அடைவதாவும் நிறங்கள் புதிது புதிதாகப் பெறுவதாகவும் பார்ப்பனர்கள் மிகவன்மைபோல் பிறர்க்கு எடுத்துரைக்கிறார்கள். இது வெறும் புரட்டு. தாங்கள் வாழ்வதற்காக அவர்கள் ஏற்படுத்திக்கொண்ட ஏற்பாடு' என்று எடுத்துக்காட்டினார். வேதத்தைப் பார்ப்பனர் தவிர பிறர் தொடுவது, தீட்டு என்று கூறப்பட்டது. இதனைக் கண்டித்துத்தான் எழுதிய 'வேதாந்தம்' எனும் புத்தகத்தில் 'தலைசிறந்த புனிதமிக்க புத்தகம் வேதம் என்றால் அது எல்லா மக்களுக்கும் சொந்தமாக இருக்க வேண்டுமேயன்றி ஒரே ஒரு குலத்தினராகிய பார்ப்பனர்களுக்கு மாத்திரம் சொந்தம் என்று கூறுதல் அர்த்தமற்றது' என்று குறிப்பிட்டார் மோகன்ராய். இதனைப் படித்த பார்ப்பனர் பதைத்தனர். இந்துமத விரோதி மோகன்ராய் எனத் தூற்றத் தொடங்கினர் பலர். தூற்றல் துந்துபிபாடிய அவர்களுக்காக, மதம் எது? எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும் மதம்? இன்றைய மதங்கள் எப்படியிருக்கின்றன? என்பதை விளக்கி ஒரு புத்தகம் வெளியிட்டார் அவர். அதில் மோகன்ராய் மதம் மக்களுள் ஒரு வித வேறுபாடும் பாராட்டாமல உயர்குலம் தாழ்குலம் என்ற கொள்கையை மேற்கொள்ளாமல், நிறம் முதலிய வித்தியாசங்கள் காட்டாமல் ஒருவர் மீது ஒருவர் அன்பு காட்ட உதவவேண்டும். ஆனால் இன்றைய மதத்தலைவர்களோ மனப்பான்மைக்குத் தக்கவாறு அவ்வித அற்புதங்களை தந்திரத்தாலும் வாக்கு வன்மையாலும் நிலைநிறுத்திவிட்டார்கள். இதனால் மக்கள் தங்கள் மதத்தலைவர்கள் கூறியபடி நடப்பதுதான் புண்ணியம் என எண்ணிக் கொண்டார்கள். இவ்வித எண்ணத்தைப் பரவச் செய்த மதவாதிகளே உண்மையில் மதவிரோதிகள்' என்பதை எடுத்துக் காட்டினார்.

மோகன்ராயின் காலத்தில் இந்திய அரசியலில் பெருத்த மாறுதல் ஏற்பட்டது. வாணிபக் குழுவினராக இந்தியாவிற்கு வந்த ஆங்கிலேயரின் ஆட்சியின் கீழ் வந்தது இந்தியா. ஆங்கிலம் கற்றவருக்கே அரசாங்கத்தில் வேலைகிடைத்தது. மோகன்ராய் அரபி, பெர்ஷியன், ஹீப்ரு, கிரீக், வங்கம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வல்லுனராதலால் ஆங்கில அரசாங்கத்தில் குமாஸ்தா வேலை அவருக்குக் கிடைத்தது. அதன் மூலம் மதத்துறை ஆராய்ச்சியோடு அரசியலிலும் கவனம் செலுத்தவாரம்பித்தார் அவர். மோகன்ராய் 1821—ல் வங்கமொழியில் (சம்பாத்கௌமுடி) ஒரு பத்திரிகையும் பின்னர் பெர்ஷிய மொழியில் (மீராத்—அல்—அக்பர்) மற்றொரு பத்திரிகையும் வெளியிட்டார். அப்போது இந்தியாவிலேயே இந்த இரண்டு பத்திரிகைகளும் சேர்ந்து மொத்தம் நான்கே பத்திரிகைகள் மூலம் மக்கள் தம் நாட்டுப் பற்றை வளர்க்கப் பெரிதும் உதவினார் அவர். இந்தியரின் கல்வியினை குறித்து வருந்திய அவர் பல பள்ளிகளும் கல்லூரிகளும் துவக்குவதில் பெரிதும் பங்கு கொண்டார். இந்தியர் சமூக அரசியல்துறைகளில் உயர ஆங்கில மொழியறிவு மிகமிக அவசியம் என வலியுறுத்தினார். இப்போதும் நடைமுறையிலிருக்கும் கல்விகற்கப்படும் முறைக்குக் காரணமாயிருந்தவரும் அவரே.

இளமையில் பாட்னா இஸ்லாமியக் கல்லூரியிலும் பிறகு காசியில் இந்துமத வியாக்யான நூல்களையும் கற்றதால், பிற மதங்களோடு இந்து மதத்தை ஒப்பிட்டுப்பார்க்கும் பக்குவம் அடைந்தார். பார்ப்பனக் குழந்தையாயிற்றே! அதனால், உபநிஷத், வேத வியாக்யானம், ஆகியவைகளையெல்லாம் சிறு வயதிலேயே கற்கும்படி செய்தனர்

பெற்ளேர். அவர்தம் குடும்பம் வைணவ மதத்தைச் சார்ந்தது. இவ்விதம், இந்துமதத்தின் ஆதி நூல்கள் எனப்படும் அனைத்தையும் கற்றதால், அதிலுள்ள ஊழல்களை எடுத்து விளக்கினர். 'விதண்டாவாதம்' எனச் சீறினர்—வயோதிகர், 'பார்ப்பனக் குழந்தையா இது? பாருமய்யா' பாரும்!' என்றனர், சாஸ்திரம் எந்திகள். ஆனல், அவரோ, இந்த எதிர்ப்புகளையெல்லாம் பொருட்படுத்தவில்லை. இவ்விதம் மதம், அரசியல் ஆகியதுறைகளில் ஆராய்ச்சியுடன் தீவிரப்பணிபுரிந்த அவரது உள்ளத்தை உலுக்கும் சம்பவம், ஒன்று நடைபெற்றது, இந்தச் சம்பவமே அவரை ஒரு தீவிரவாதியாகச் செயலில் இறங்கச் செய்தது! ராம்மோகனுடைய அண்ணன் ஜகன்மோகன் 1811-ல் இறந்தார். அவரது உடலைச் சுடலையில் கொளுத்தக்கொண்டுபோனதோடு, அவரது அருமந்த மனைவியையும் குடும்பத்தார் அழைத்துப்போயினர். ராம்மோகன் — நடக்கப் போகும் கொடுமையை நினைத்தார்! துக்கம் பீறிட்டது! "அண்ணி! வேண்டாம், வேண்டாம். இது மடைமை. அண்ணன் இறந்துவிட்டார். அவருக்காகத் தாங்கள் உயிரோடு இறப்பதா? அதனல் என்ன லாபம்? அவர்மீது தங்களுக்கிருக்கும் பதிபக்தியைக் காட்ட இது தானு வழி!" என்று, தடுத்தார். குமுறினர். ஆனல், எவரும் கேட்கவில்லை! அண்ணியாரும் கேட்கவில்லை!! சதி மூட்டப்பட்டது. தீ எரிந்தது! அந்த அம்மணியும், படுத்துக்கொண்டார். ஆனல், தீ, தாவி எழுந்ததும் உடம்பைச் சுடவே, துள்ளினர் அந்த அம்மை. 'ஐயோ!' என்று நெளிந்தார். 'மோகன் சொன்னது உண்மை. விடுங்கள்' என்று கதறினர். ஆனல், சுற்றிநின்ற வைதிகர் விடவில்லை! துடித்துப் பாய்ந்த மோகனைப் பிடித்துக்கொண்டனர். மூங்கில்கழிகளால், அந்த அம்மையை, மடக்கிப்போட்டுக்கட்டினர். அவளது கதறல் வெளிக்குக் கேட்காமலிருக்க தப்பு, தப்பட்டை, சங்கு ஆகியவைகளை விடாது முழக்கினர்—வெந்து போனுள் அந்த அம்மை. நொந்தார் மோகன். கண்ணில் நீரும், இதயத்தில் சபதமும் தாங்க, புறப்பட்டார்.

அப்போது இந்திய கவர்னர் ஜெனரலாக இருந்த பெண்டிங்பிரபுவைச் சந்தித்து உரையாடினர். அவரிடம் இந்து மதத்தின் அந்தப் பெருங்கொடுமையை எடுத்துக் காட்டினர். அதன்விளைவாக 1829ம் ஆண்டு இறந்த கணவரோடு உடன்கட்டை ஏறுதல் எனும் வழக்கம் சட்டமூலம் ஒழித்துக்கட்டப்பட்டது. இந்த நிகழ்ச்சியே மோகன் ராயின் பெருமையை இந்தியத் துணைக்கண்ட முழுமையும் பரப்பியது. அதனேடுமட்டும் நின்றுவிடவில்லை அவர். பெண்களின் இழிவு நீங்கவும் அவர்களின் சொத்துரிமைக்காகவும் அடிக்கடி போராடினர்.

வெளிநாடுகளேக்காண வேண்டும். அதிலும் இங்கிலாந்துபோன்ற இந்தியாவோடு நெருங்கிய நாடுகள் சிலவற்றைக்காணவேண்டும் என அவர் விரும்பினர். விருப்பைநிறைவேற்றி வைக்க 1830-ம் ஆண்டு நவம்பர் பத்தொன்பதாம்நாள் கல்கத்தாநகரிலிருந்து புறப்பட்டார்.

அப்போது கடல் பிரயாணம் செய்வது அவ்வளவு எளிதான காரியமல்ல. புயலும் பொல்லாத தொல்லையுமல்ல காரணம். பார்ப்பனருள் எவரும் கப்பலேறிச் செல்லக்கூடாது என்றும் அப்படிச்செல்பவர்களேப் பாரப்பனர் எவரும் தம்மோடு சேர்த்துக்கொள்ளக் கூடாது என்றும் விதிக்கப்பட்டிருந்தது வேதத்தில். இதனை மீறிக் கப்பலேறிச் செல்லும் ஒரு சிலரும் ஒதுக்கிவைக்கப்பட்டனர் பிறரால். அதனுலேயே அப்போது இந்நாட்டினர் பலர் மேல்நாடுகளிக்குச் சென்று புதிய கருத்துக்கள் பலவற்றை அங்கிருந்து கொணர்ந்து இங்கு பரப்ப வழியில்லாமல் போயிற்று. ஊரால் ஒதுக்கப்படுவோம் என்பதை நன்ருக உணர்ந்த பின்னரும் கடல்கடந்து இங்கிலாந்து சென்ருர் மோகன்ராய். நமக்குப் பின்னர் பலர் மேனுடுகள் செல்லத் தாம் காரணமாயிருக்க வேண்டுமென்பது அவரது அவா.

இங்கிலாந்து சென்ற மோகன்ராய்க்கு அங்கு மகத்தான வரவேற்புகள் வழங்கப்பட்டன. அங்கு நடந்த வரவேற்புக் கூட்டங்களிலொன்றில் டாக்டர் பௌரிங் (Dr. Bowring) என்ற ஆங்கில அறிஞர் மோகன்ராயை அரசியலறிஞன் பிளேட்டோவுக்கும் சிந்தனைச்சிற்பி சாக்ரடீசுக்கும் ஒப்பிட்டுப் பேசினரென்றுல், மோகன்ராய்மீது இங்கிலாந்து மக்களும் அறிஞர்களும் எவ்வளவு மதிப்பு வைத்திருந்தார்கள் என்பது எளிதில் புரியும். இங்கிலாந்தில் அவர் பிரிட்டிஷ் மன்னரையும் பின்னர் பிரான்சுக்குச் சென்று பிரெஞ்சுப்பேரறிஞர்களேயும் கண்டு உரையாடினர். மேல் நாடுகளில் இவ்வாறு மூன்ருண்டுகள் சுற்றுப் பிரயாணம் செய்த மோகன்ராய்க்கு அங்கேயே கொடிய நோய் ஒன்று ஏற்பட்டது. அதன் விளைவாக பிரான்சில் பிரிஸ்டல் (Bristol) நகரில் 1883-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 27-ம் நாள் இயற்கை எய்தினர், இராஜாராம் மோகன்ராய். மோகன்ராயின் மறைவு இங்கிலாந்திலும் இந்தியாவிலுமிருந்த அறிஞர்கள் பலருக்குப் பெரிதும் வருத்தத்தை அளித்தது. சீர்திருத்த உலகு தனது சிறந்த செம்மலை இழந்து தவித்தது.

பொய்யும் புரட்டும் ஒழிந்து புதிய எண்ணங்கள் மக்கள் மத்தியில் பவனி வரவேண்டும் என்று கூறிய புத்தரைக் கடவுளாக்கிய பார்ப்பனியம் நல்லவேளையாக அதன் கொடுமைகளை உலகுக்கு உணர்த்திய உத்தமர் மோகன்ராயை அவதார புருஷராக்காமல் விட்டுவிட்டது!

★

6-ம் பக்கத் தொடர்ச்சி

முடியாட்சிமுறை தகாது—கூடாது—தர்பார் அது—ஒழிய வேண்டும் என்று பேசி, ஜனநாயக முறைக்காகப் பாடுபட்டனர், உலக சிற்பிகள். அந்தக் குரல், மக்களை அடிக்கடி சந்திக்கும் வாய்ப்புப் பெற்ற பொது ஜனத்தலைவர் நேருவிடமா, வருவது?

முடியாட்சியில், "நானே மன்னன்; எனவே கொடு!" என்று திமிரோடு கட்டளை கிளம்பும்—செத்து மடிவோர், அலட்சியப் படுத்தப்படுவார்கள்—வதன வசீகரமும், சுகபோகமுமே முக்கியமாகக் கருதப்படும்.

அதனுல்தான், புதுமை விரும்பிகள் அந்த 'தர்பார்' முறை தவிடுபொடியாகி, மக்களின் கைக்கு அரசு மாறவேண்டும் எனப் போராடுகின்றனர். அவ்விதம் மாறினுல்தான், ஜனநாயகம் உருவாகும் — மக்கள் தமக்கு வேண்டியதைப் பெற்றுக் கொள்வார்கள் — வாழமுடியாதோரும் வாழமுடியும் — என்று, கருதுகின்றனர்.

இந்நிலையில், ஜனநாயகத்துக்காகப் பாடுபடும் பண்டிதநேரு. தியாக சுபாவம் குறித்து வெளியிடுகிருர் என்ருல், என்னவென்று கூறுவது?

"அதிகாரக் குரல்' 'திமிர்'—இவ்விதம் வார்த்தைகளை வீசுகிருயே, பண்டிதர்மீது. அவர், அவ்விதமா, பேசினர்? எவ்வளவு, அன்பாக, கூறியிருக்கிருர். மேற்படி கோரிக்கையை! அதற்கேன், மன்னரின் மமதையையும், மக்கள், நலம் விரும்பா, மதோன்மத்தர்களையும், இழுக்கிருய்?"—என்று, கேட்கத் தோன்றலாம், பலருக்கு.

உண்மைதான், அன்பொழுகத் தான், கூறியிருக்கிருர் — தியாக சுபாவம் வேண்டுமென்று.

ஆனல், அவர் கூற்றுக்குள் பொதிந்திருக்கும், விஷயம் எது?

பணம்! — இதற்காகத்தான், மக்களை, மணிமகுடதாரிகள், மதிக்கவில்லை. வாட்டினர்கள், வேதனை தாங்காது, 'வீதியிலே பிணம்' என்று கூறியபோது, விசாரமில்லாமல் 'பரவாயில்லை — பணிக்கு மேடைக்குத் திட்டம் தீட்டு!' என்று, கூறினர்கள்.

அதே 'விஷயம்'தானே, அன்பர் நேரு அவர்களின், அன்புப் பேச்சிலும் பொதிந்திருக்கிறது.

மக்களை மதியா மதோன்மத்தர்கள், தமது சுகபோகங்களுக்காக, நாட்டில் காட்டாட்சியை நடாத்தினர்கள்—நலிவோரின் துயர்துடைக்கவும் விரும்பவில்லை.

பண்டிதர் அவர்களும் அதே 'பாதை'யைத்தானே, வெளியாக்குகிருர்—தியாக சுபாவம் வேண்டுமென்று கோருவதன் மூலம்,

மக்களின் பசியைவிட, தங்களுடைய மோகனமான வாழ்வு பெரிதாக இருந்தது அவர்களுக்கு!

இவருக்கும், மக்களின் வாழ்க்கையைவிட, நாட்டின் 'தரமே' பெரிதாகப்படுகிறது.

'அதெப்படி? நாட்டின்தரம் உயர வேண்டுமென்பது, மக்களுக்காகத்தானே — தனக்காகவா! அல்லவே' என்று, கேட்கலாம்.

நாட்டின் 'தரம்' உயர்வதன் பதில் மக்களின் நன்மைகளும் பொதிந்துகிடப்பதென்பதை மறுக்கவில்லை. நாம். ஆனல், அந்தத் 'தரத்தை'ப்பெற, அவர் கையாளும்படி போதிக்கும், வழிமுறையை உற்று நோக்கவேண்டுகிருேம்.

பசியை அடக்கிக்கொண்டு பாடுபடுவோம்!—என்கிறார்.

பார்த்திபர்களும் அதைத்தான் சொல்லினர்—ஆனல் மிடுக்கோடு.

"அந்த மிடுக்கும் திமிரும் எமது பண்டிதரிடம் எங்கேயிருக்கிறது?"—எனலாம்.

உண்மை—ஆனல், அந்த மிடுக்கும் திமிரும் மக்கள்மீது, ஏன் வீசப்பட்டதோ, அதற்காகத்தானே, அன்பர் பண்டிதருடைய அன்புப் பிரசங்கமும் வீசப்படுகிறது.

விஷத்தை, வெறும் கிளாசில் தந்தால் என்ன? ஷர்பத்தோடு கலந்து அளித்தால் என்ன?—இரண்டும் ஒன்றுதானே!

மக்களின் வாழ்வை மறந்து, தமது வாழ்க்கையைப் பெரிதாக நினைத்தனர் — அவர்கள். சுரண்டினர்—கொழுத்தனர். அதே குற்றத்தைத்தானே 'அலாகாபாத்'தாரும் செய்கிருர்.

தியாக சுபாவம் தேவையாம்!—அப்போதுதான் பணம் மிஞ்சுமாம், ஆலைத் திட்டங்களுக்கு.

பண்டிதர் பணம் கேட்பது, நாட்டின் தரம் உயர.

அவர்கள் கேட்டது—தமக்காக—ஒருவனின் தேவைக்காக.

'ஜனநாயகத்தின்' பேரால் உலவும் பண்டிதர் கேட்பது, 'சிலருக்காக.

இல்லையெனில், பண முதலைகளிடம் பதுங்கிக்கிடக்கும் பணத்தை வெளியே கொணர்ந்து, நாட்டுக்குத் தேவையான நல்ல திட்டங்களை நிறைவேற்றுது; தம்மைச் சுற்றியிருப்போருக்கு இலட்சக்கணக்கில் நிர்வாகம். துாதுக்குழு எனும் காரணங்காட்டி, செலவழித்துக் கொண்டு, ஏழையும் மக்களைப் பார்த்து 'பட்டினி கிடந்தாவது பணம் சேமியுங்கள்!' என்று ஏன் கூறவேண்டும்.

இந்த விஷயத்தைத்தான் சிந்திக்க வேண்டுகிருேம் — சினம் கொள்ளாமல். வித்தியாசம், 'குரலில்'தானேயொழிய, விளைவு—மக்களுக்கு வேதனைதானே!

முடியாட்சி மூர்க்கம் நிரம்பியது! —காட்டு ராஜா தர்பார் கொண்டது! — களைந்தெறியப்பட வேண்டியது! என்று கர்ஜிக்கும் ஜனநாயகவாதி, இவ்விதம், தியாக போதனை செய்வானேன்?

அதற்கு மக்களிடமிருக்கும் 'தேச பக்தி'யை அழைப்பதேன்?

இந்த முறையைத்தானு, மக்கள், இவரிடம் எதிர்பார்த்தனர்! ஜனநாயகப் போர்வையில், 'ராஜாக்களின் தர்பார்' முறை, ஒலிக்கலாமா!!

'ஒருவன் தேவைக்கே இத்தேசம் உரியது'—என்பதை ஒழிக்கும் புதுயுகம் வளரும் நேரத்தில், 'சிலரின் தேவைக்கே இத்தேசம் சொந்தம்' என்பதை, வளர்ப்பதா நல்லது?

சிங்கத்துக்குப் பயந்தால், 'ஆம்! ஆம்! சிங்கம் பயங்கரமானதுதான்' என்று செப்பிவிட்டு, நாலைந்து புலிகளிடம், நடுங்கும் ஆட்டை ஒப்படைப்பதா, நல்லரசு?

இத்தகைய 'நல்லாட்சி'யையா விரும்பினர், மக்கள்.

இது, எத்தகைய ஆபத்து!—இதே பாதையில்தானே, பாசிசமும் நாஜிசமும் உருவாயிற்று.

இந்தப் பாதையில் பண்டிதரே செல்கிருரே—அழகா! நல்லதா!!—எவ்வளவு இரத்தம் சிந்தி, புது ஆட்சி ஏற்படுத்தப்படுகிறது. அந்த இரத்தத் துளிகள் யாவும் இவ்விதமா, கேலி செய்யப்படவேண்டும்.

வளரும் 'நேரு'வை உற்று நோக்குங்கள்—பழைய உருவம் மாறி, 'புது உருவம்' பெற்று வருவதைக் காணலாம். எவ்வளவு ஆபத்து இது!

✲

## நன்றி

அன்புடையீர்!

இலட்சியவாதி - என் அண்ணன் கே. எஸ். பாண்டியன் அவர்களின் மறைவு குறித்து அனுதாபம் தெரிவித்துள்ள தி. மு. க., தி. க. கம்யூனிஸ்டு கட்சி, மற்றும் முற்போக்குவாதிகள் அனைவருக்கும், பத்திரிகைகளுக்கும், அனுதாபக் கூட்டங்கள் போட்டு கண்டனக் குரலை எழுப்பிய சங்கங்களுக்கும் எங்கள் குடும்பத்தின் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். தோழர் பாண்டியனுரின் இலட்சியக் கனவுகளை நிறைவேற்றும் பணியை, அவர் விட்டுச் சென்ற இடத்திலிருந்து நான் தொடர இருக்கிறேன் என்பதையும் கூறிக்கொள்கிறேன். ஒவ்வொருவருக்கும் தனித் தனியே எழுதஇயலாமைக்கு வருந்துகின்றேன் — மன்னிக்கவும்.

கே. எஸ். அருணுசலம்,
தி. மு. க. உறுப்பினர்.

### தேவகோட்டையில்!

7—12—52 ஞாயிறு மாலை காந்தி சதுக்கத்தில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் தி. மு. க. பொதுச் செயலாளர் அண்ணுதுரை, ஈ. வி. கே. சம்பத் கலந்து கொள்வர். தோழர் கண்ணதாசன் தலைமை வகிப்பார். பொதுச் செயலாளரிடம், நிதி முடிப்பு அளிக்கப்படும்.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கிறோம். ராதாகிருஷ்ணன் தளபதி நகிபைச் சந்தித்தார்—காஷ்மீர் முடியாட்சி ஒழிய பண்டித நேரு ஆவல்—அப்துல்லாவின் சுதந்திரப்போராட்டம்—ராஜப்பிரமுகர்கள் மத்தியில் கோபாலசாமியாரின் கம்பீரம்—இவ்விதவிளக்கங்களோடுவரும். புகைப்படங்களைக் காணும்போது, மனித நீதி அரசோச்சப் புறப்படுகிறது, என்று அகமகிழ்கிறோம் நாம். மக்களின் வாழ்வில், முடியாட்சி ஏற்படுத்திய தொல்லைகள் கொஞ்ச நஞ்சமா! எகிப்தின் வீதிகளிலே, இல்லாதவனும், பசித்தவனும், ஏழையும், வியர்வை சிந்தியும், வீடில்லாதவனும், ஊழலும், லஞ்சமும்; கிடக்கும்போது, மன்னன் பரூக்கின் மாளிகைகளில் நடைபெற்ற கோலாகலங்கள், விதவிதமானவையன்றோ? குளிக்கும் அறையில் தங்கத்தில் பதிக்கப்பட்ட கண்ணாடி—நிர்வாணமான பெண்களின் சிலைகள் தந்தத்தில்! பறந்துசெல்ல ஐந்து ஆகாய விமானங்கள்! நூறு கார்கள்! ஆயிரம் பட்டுச்சட்டைகள்! இருபது அறைகள், 'சூட்டுகள்' வைக்க! பல்லாயிரக்கணக்கான 'பாதாட்சைகள்!' கூஷவரச்செட்டுகள் நூற்றுக்கணக்கில்! சீட்டுக்கட்டுகள் — தாயக்கட்டைகள் — அத்தனையிலும் தங்க முலாம். தனியாக ஒரு சினிமா தியேட்டர்! எப்போதும் தயாராக, புதுப் புதுப் படங்கள்! கடலில் ஸ்நான கட்டம் — மன்னனோடு குளிக்க மாதுகள் பலர்!—இவ்விதம் பரூக்கின் வாழ்க்கை இருந்தது எகிப்தில்! ஒரு மனிதனுக்கு—இவ்வளவு. ஆனால், இவ்வளவு சுகத்தையும் அவனுக்குத் தந்து, 'மௌளலானு! மௌலானு!!' என்று போற்றித்துதித்த மக்களோ, வீதிகளில்! விழிகளில் நீரோடு!!—இந்த விந்தையான, நிலையைக் கவனிக்கும், எவருக்கும் முடியாட்சி ஒழிந்து ஜனநாயகம் மலரவேண்டுமென்றே, விரும்புவர்.

மக்களின் அரசு நடக்கும், மக்களின் பசி தீரும். மக்கள் வாழ்வர்—ஜனநாயக ஆட்சி மலர்ந்தால் எனும் ஆசை. ஜனநாயக தத்துவம் அறிந்தோருக்கு ஏற்படும்.

அதனால்தான், பண்டித நேருவும், அவரது சகாக்களும், முடியாட்சி முறைக்கு கல்லறை எழுப்புவதையும், ஜனநாயக ஆட்சிக்கு வரவேற்பு வழங்குவதையும். படங்களிலும் செய்திகளிலும் காணும்போது மகிழ்வதுண்டு, நாம்.

ஆனால், இந்த மகிழ்ச்சியைத் தூளாக்குவதுபோல, அண்மையில் ஒரு வியாக்யானம் வெளிவந்திருக்கிறது, பத்திரிகைகளில்.

'வைர நெக்லஸ்' காட்டினன். மக்களை மறந்தான். இது, முடியாட்சி முறையின் கேடு, என்றோம்.

இப்போது, / அதே பாணியில், மேற்படி வியாக்யானம் வந்திருக்கிறது—ஜனநாயக ஆட்சி பேசும் ஒருவரிடமிருந்து.

மன்னன், கேளிக்கைகளோடு கிடந்தான்!—மக்கள் நசித்தனர்!!—இது, முடியாட்சியில் நடைபெற்ற கொடுமை என்று குறிப்பிட்டோம்.

இப்போது, அதே கொடுமை, வேறு உருவில் விளக்கப்படுகிறது—மக்கள் நசித்தாலும் பரவாயில்லை, தேசத் திட்டங்கள் நிறைவேற்றப்படவேண்டுமென்று.

அவர்கள், மன்னர்கள்! மகேசனின் பிம்பம் என்று கருதியவர்கள்!! ஆகவே, அவ்வளவு மதோன்மதத்தோடு, கூறமுடிந்தது.

இவர்கள், ஜனநாயகம் பேசிகள்! மக்களின் தலைவர்கள்!! — ஆகவே, குழைவு செனிவோடு கூறப்படுகிறது.

பசித்த மக்களைப் பார்த்து, கவலைப்படவில்லை—முடியாட்சி. தன்னுடைய வைர நெக்லஸையும், அந்தப்புர அழகிகளின் புன்சிரிப்பையுமே ரசித்தது.

இப்போது, அதைக் கண்டித்தோர், பசித்த மக்களைப் பார்த்து, கவலைப்படுவதாகக் காட்டிக்கொண்டு, தேசத் திட்டங்களையும், தேசப் பெருமையையும் நீட்டுகின்றனர் — ஜனநாயகம் பேசிகள்.

இந்திய உபகண்ட முழுமையும், பசி! பசி!! எனும் பரிதாபக் குரல், கேட்கிறோம். இந்த வேதனை ஒழிய, எது வேண்டுமானாலும், செய்திட வேண்டும் என்று விரும்புகின்றனர், மக்கள்.

இதனை விளக்கி வீரமாகப் பேசிவிட்டு, வெளியிட்டிருக்கிறார்—ஒருவர் "தேசத்தின் புனர்நிர்மாணத் திட்டங்களை நிறைவேற்றி நமது தரத்தை உயர்த்திக்கொள்ள, உணவு விஷயத்தில், வேண்டிய அளவு 'தியாகம்' செய்ய வேண்டும்" என்பதாக.

இவ்விதம் வெளியிட்டவர்; இதனை, உதாரணத்தோடும் விளக்கியிருக்கிறார்-விபரமாக: "வெண்ணெயைக் கொடுத்துவிட்டுத் துப்பாக்கிகளை வாங்க வேண்டுமென்று இந்தியா விரும்பவில்லை. ஆனால், தேசத்தின் புனர்நிர்மாணத் திட்டங்களை நிறைவேற்றவும், தேசத்தின் தரத்தை உயர்த்தவும், பணம் தேவைப்படுதலால்; அதற்காக, வெண்ணெய் இல்லாமல் காலம் கழிக்க வேண்டிய தியாகசுபாவத்தை மேற்கொள்ள வேண்டியிருக்கும்"

['வெண்ணெய'—என்பது உணவு 'துப்பாக்கி' என்று குறிப்பிட்டது போர்த்தளவாடங்கள்.]

தியாகசுபாவம் மேற்கொள்ள வேண்டுமாம்! தேசத்தின் புனர்நிர்மாணத்திட்டங்களை நிறைவேற்றும், பணத்தைச் சேமிப்பதற்காக.

உணவு விஷயத்தில் 'தியாகம்' செய்யுமாறு, போதித்துள்ளார், அந்தப் 'புனிதர்' அதற்கு, அவர், காட்டுவது, மன்னர்களைப்போல வைரநெக்லஸோ, மாளிகை'வர்ண'ப் பூச்சோ, அல்ல! தேசத்தின் புனர்நிர்மாணத்திட்டம்!!

மேற்கண்டவிதமாகத் தெரிவித்தவர், வேறுயாருமல்ல, பண்டித நேரு அவர்கள்தான். பார்லிமெண்டில், இவ்வண்ணம், வெளியிட்டிருக்கிறார்.

தியாக சுபாவம் வேண்டுமாம்!—சிரிப்புவரும் கேட்போருக்கு. வயிறார உணவு, வழிந்துகிடப்பது போலவும், அவைகளைத் தின்ன முடியாமல் தின்று 'ஏப்பம்' விடுவதுபோலவும், அப்படியெல்லாம் செய்யாதீர்கள் 'அஜீரணம்' வரும் என்று போதிப்பதுபோலவும், பண்டித நேரு கூறுகிறார் இதனை.

அரிசிக்கஷ்டம் — உணவுப் பஞ்சம்—பட்டினிச்சாவுப் பட்டியல்—ஆகியவைகளைப்பற்றிய புள்ளிவிபரங்கள், அவரது மேஜையில் வந்து குவிவதாக, அவரே, முன்பொரு முறை வெளியிட்டிருக்கிறார்.

அவரே, இன்று, கூறுகிறார் — 'தியாகசுபாவம்' வேண்டுமென்று.

பிரெஞ்சு ராணி, "ரொட்டி வேண்டும்!" என்று கதறிய மக்களைக்கண்டதும், மன்னனைக்கேட்டாளாம் "இவர்கள் ஏன் ரொட்டிகேட்கிறார்கள்?" என்று. மன்னன், "அவர்களுக்கு ரொட்டி கிடைக்கவில்லை!" என்று பதில்கூற "கிடைக்காவிட்டால் என்ன? 'பிஸ்கட்' வாங்கித்தின்னட்டுமே!" என்றுளாம். அதேகுரல்—ஆனால் பெண்ணுக்குப்பதில், ஆண். அரியணைப் பாவைக்குப்பதில், 'அரசதர்பாரை' ஒழிக்கவேண்டும் என்று முழக்கும் பண்டிதரிடமிருந்து. வயிற்றைக் கட்டி, வாயைக் கட்டி, தேசத்தின் புனர் நிர்மாணத் திட்டங்களை முடிக்கவேண்டுமாம் —பசியேப்பக் காரனைப்பார்த்து, பகர்கிறார், பண்டிதர்! பட்டினி கிடப்போருக்கு, விடுக்கிறார், இச்செய்தியை!!

விந்தையான செய்திதானே, இது. விதூஷகன், கூறலாம்—ராஜாவைச் சந்தோஷத்தில் ஆழ்த்த. சுயராஜ்ய வீரரா, சொல்வது இதனை? இவ்விதம் வெளியிடுவதால், தேசப்புனர் நிர்மாணத்திட்டத்தில் பண்டிதருக்குள்ள ஆவலைப் பாரீர் எனக்கூற முடியுமா? — அவருடைய ஆவலையும் ஆர்வத்தையும் கணக்குப்போடுமுன், அசட்டுத் தன்மையன்றோ, கண்முன் காட்சியளிக்கிறது!

தேசப்புனர் நிர்மாணத் திட்டமாம் — எலும்புக் குவியல்களும், பிணமலைகளும் நிரம்பியபின் அவர்கள் மத்தியில் ஆறுகளையும், ஆலைகளையும், உண்டாக்குவார்போலும், நமது பண்டிதர்.

பசி! பசி!! என்ற பதட்டம்,ஒழியவில்லை. மனிதன், தனது அடிப்படைத் தேவையான உணவைப் பெறமுடியாமல் மரக்கிளையையும், ஆற்றுநீரையும், நம்பிச்செல்கிறன். ஆனல், நம்பண்டிதர்—அகில உலக ஜோதி என்று போற்றப்படுபவர்—மக்கள் வயிற்றையடித்து மாளிகைகளில் வாழும் மதோன்மத்த மன்னர்களைக் கண்டித்தவர் — கோருகிறார், தியாக சுபாவம் வேண்டுமாம், தியாகசுபாவம் வேண்டுமாம், தியாக சுபாவம்!

எதற்குத் தெரியுமா?
பணத்துக்காக!

ஏன் பணம். தெரியுமா?
தேசப்புனர் நிர்மாணத் திட்டங்களுக்கு.

எவை தெரிமா, அத்திட்டங்கள்?
ஆலைகள், அமைக்க. இயந்திர சாதனங்கள் தருவிக்க.

எதற்குத் தெரியுமா, அவை?
நாட்டின் வாழ்க்கைத்தரம் உயர—வளம் பெற.

"உண்மைதானே! ஒரு நாட்டின் தரம்வளர, ஆலைகள்வேண்டாமோ? அவைகளை நாம் வெளிநாடுகளிலிருந்து தருவிக்கப் பணம் வேண்டாமே?"—என்று கேட்கத்தோன்றும். உண்மைதான்! பண்டிதர், பகர்வதை நாம் மறுக்கவில்லை. "ஆலைகளின் பட்டியல் வளர்வதுகூடாது—தக்ளியும் ராட்டையுமே நமது தேசத்தின் பொருளாதாரச் சாலைகள்" என்று கூறும் பித்துள்ளம் கொண்டோரல்ல, நாம். ஒப்புக்கொள்கிறோம், பண்டிதர் கூறுவதை! ஆனல், அவைகளைப்பெற—நிர்மாணிக்க—தியாக சுபவேம் ஏன்? யாருக்குத் தேவை அத்தியாக சுபாவம்?

அமெரிக்காவிடமிருந்து உதவி மேல் உதவி வருவதாகக் காண்கிறோம், செய்திகளில். அந்நிய முதலாளிகள் ஜப்பானிலிருந்தும், ஸ்விஸ்தேசத்திலிருந்தும், பிரிட்டனிலிருந்தும், அமெரிக்காவிலிருந்தும், 'பாரதமாதா'விடம் வந்து, ஒப்பந்தம் பேசுகிறார்கள்—ஆலைகட்டப் போகிறார்கள்—என்று அறிகிறோம். பாரதமாதவின் மடியில், அந்த 'வெள்ளை முதலைகள்' யாவும், ஒய்யாரமாக உலவுகின்றதையும்—உலவ இந்தச் சுயராஜ்ய வீரர்களே ஒத்துழைப்பு நல்குவதையும்—காண்கிறோம். அதைச் சுட்டிக்காட்டி, நம்போன்றூர் கேட்டால், "எல்லாம் தேசசுபிட்சத்துக்குத்தான் ஆலைகள் பெருகி, வேலையில்லாத் திண்டாட்டம் ஒழியவேண்டாமோ? அதற்குத்தான்!"—என்று, தேசியத் தலைவர்கள், பதில் தரவும் செய்கிறார்கள்.

கூச்சமின்றி, கூறுகிறார்கள், இதனை. 'வெள்ளையனை வெளியேற்றுவோம்!' என்று, முழக்கமிட்டோர், கூறுகிறார்கள், இதனை.

இருந்தும், பண்டிதர், அதே ஆலைகளை நிர்மாணிக்க, :தியாகசுபாவம்' கோருகிறார்! 'பசித்தால்—பரவாயில்லை அடக்கிக்கொள்' என்று, இதோபதேசம், புரிகிறார்.

'துப்பாக்கிகளுக்கென,' — நாட்டின் பாதுகாப்புக்கென,—அரசாங்க வருமானத்தில் பாதிக்குமேல் செலவழிக்கும் பண்டிதர், 'பட்டினி கிடந்தாவது நாட்டின் தரத்தை உயர்த்துவோம்' என்கிறார்.

சுமார் 260 கோடிரூபாய்! இராணுச் செலவு!!—செய்யும், பண்டித நேரு, தியாகசுபாவம் கேட்கிறார்.

பலகோடிரூபாய்களை, விருந்துக்கும், விஜயலட்சுமி போன்றோரின் தூதுக்குழுவுக்கும், விரயம் செய்யும், டில்லி அதிபர், மக்களைப் பட்டினிகிடந்தாவது நாட்டின்தரத்தை உயர்த்த வேண்டுமென்கிறார்.

டாடாவும் பிர்லாவும் டால்மியாவும் பஜாஜூம், பதுக்கிவைத்திருக்கும் பணத்தொகையின் அளவை கணக்கிட்டு வைத்திருக்கும், மோதிலாலின் செல்வர், அவைகளை வெளிக்கொணரும் வழிவகைகளைக் காணமல், அன்னவிசாரத்தால் அவதிப்படுவோரிடம், போதனை செய்கிறார்— தியாக சுபாவம் வேண்டுமென.

வரிமேல் வரியாகப் போடும் காங்கிரஸ் சர்க்கார்களின் தலைவர் கூறுகிறார், இவ்விதம்.

சமஸ்தானதிபதிகளாம், குறுநில மன்னர்களிடம், கொட்டிக்கிடக்கும் செல்வம் ஏராளம்—குதிரைப்பந்தயத்துக்காகவும் கோமளவல்லிகளுக்காகவும் அவர்கள் செலவிடுவதைக் கண்ணாரக்காணும் பொது ஜனத் தலைவர், உதிர்த்துள்ளார், இச்சொல்லை.

தியாகசுபாவம் வேண்டுமாம்—மாளிகை வாசிகளுக்குஅல்ல; சாதாரண மக்களுக்கு.

இவ்விதம் கூறுபவர், ஒரு ஏனோதானோ வல்ல! பண்டித நேரு. முதலமைச்சர் மட்டுமல்ல, காங்கிரஸ் கட்சியின் தலைவருங்கூட, அவர். அவர், அறிவுறுத்துகிறார், இதனை.

மக்களுக்கும் தனக்கும் தொடர்பேயில்லாத, மணிமகுடதாரிகள் மக்களை மறக்கலாம்—அவர்கள் வேதனையை அலட்சியப் படுத்தலாம்—வீதியில் பிணங்களிருந்தால் பரவாயில்லை, பழரசம்கொடு; எனக் கேட்கலாம்.

அவர்கள் 'மன்னர்கள்! அப்படித்தான், கேட்பார்கள். அதனல்தான்,

(5-ம் பக்கம் பார்க்க)

## நீத்தார் நினைவு

20—11—52 வியாழன் காலை 10-மணிக்கு சிதம்பரம், புதுப்பேட்டை பிள்ளையார்கோவில்தெருவிலுள்ள 22-எண் இல்லத்தில் தோழர் தில்லை-வில்லாளன் தந்தையார் திரு. வீ. இராமகிருட்டினனர் அவர்களின் நினைவுநாள் விழா நடந்தது. தோழர் கடலூர் வழக்கறிஞர் இரெ. இளம்வழுதி எம். ஏ., பி. எல்., தலைமை வகித்து, அன்னரின் படத்தைத் திறந்து வைத்தார். தோழர்கள் காஞ்சி-கல்யாணசுந்தரம், அ. சம்பந்தம், ஆகியோர் 'நீத்தார் நினைவு' என்பது குறித்து விளக்கவுரையாற்றினர். நீத்தார் நினைவின் அறிகுறியாக வெளியிடப்பட்ட சிறு ஏடு எல்லோருக்கும் வழங்கப்பட்டது. தோழர் வில்லாளன் இறுதியில் நன்றி கூறினர். வந்திருந்த எல்லோருக்கும் பகல் உணவு படைக்கப்பட்டது. நீத்தார் நினைவில் பொதுச் செயலாளர் சி. என். ஏ:, தோழர் ஈ. வே. கி. சம்பத் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

Edited Printed & Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press, 95, Tirukkachinambi St., Kancheepuram.